20.08.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## ரூ.2,950 கோடி நீர்வள திட்டம் பரிந்துரைக்க மத்திய அரசு சம்மதம்

நீர்வள, நிலவளத் திட்டத்தின், இரண்டாம் கட்ட பணிகளுக்கான நிதியுதவிக்கு, உலக வங்கிக்கு பரிந்துரைக்க, மத்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

விவசாய விளைபொருட்கள் உற்பத்தியை அதிகரிக்க, பாசனத்திற்கான நீர் வழங்கும் திறனை மேம்படுத்த, 2007ல், நீர்வள, நிலவளத் திட்டத்தை தமிழக அரசு துவக்கியது. உலக வங்கியின், 2,950 கோடி ரூபாய் கடனுதவியில், இப்பணிகள் நடந்து வந்தன. பல மாவட்டங்களில், 16 லட்சம் ஏக்கர் பயன் பெறும் வகையில், பாசன வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது. 5,220 ஏரிகள், 725 அணைக்கட்டுகள், 8,788 கி.மீ., துார கால்வாய்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம், ஜூன் மாதத்துடன் நிறைவு பெற்றது.

இதையடுத்து, தொடர்ந்து, மேலும் பல மாவட்டங்களில், இந்தத் திட்டத்தை தொடர, மாநில அரசு விரும்புகிறது. இரண்டாம் கட்டமாக, 2,950 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இந்த பணியை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, மீண்டும் உலக வங்கியின் கடனுதவி பெற முயற்சி எடுக்கப்படுகிறது. உலக வங்கிக்கு பரிந்துரை வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்தகவல் திட்டத்தை செயல்படுத்தும் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, அடுத்தக்கட்ட ஏற்பாடுகளை,

பொதுப்பணித் துறை விரைவில் துவங்கஉள்ளது. உலக வங்கி குழுவும் விரைவில் சென்னை வந்து, பொதுப்பணித் துறை உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளது என, தகவல் வெளியாகிஉள்ளது.

**பயிர் கடனுக்கான வட்டி மானிய திட்டம் நீட்டிப்பு பிரதமருக்கு முதல்வர் எழுதிய கடிதத்தால் நன்மை**

சென்னை: விவசாயிகளுக்கான குறுகிய கால பயிர்க்கடன் வட்டி மானிய திட்டத்தை, 2016 மார்ச் வரை நீட்டித்து, மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

விவசாயிகளுக்கான குறுகிய கால பயிர்க்கடன் வட்டி மானிய திட்டத்தை, நடப்பு நிதியாண்டில், ஜூன், 30 வரை மட்டுமே நீட்டித்த மத்திய அரசு, மாற்று திட்டம் குறித்து ஆலோசித்து வந்தது. இதுதொடர்பாக, தமிழக அரசு சார்பில், ஏப்ரல், 29ல், கடிதம் அனுப்பப்பட்டது; ஜூன், 20ல், முதல்வர் ஜெயலலிதா, பிரதமருக்கு கடிதம் எழுதினார்.

அதில், 'பயிர்க்கடன் வட்டி மானிய திட்டம், தற்போதுள்ளபடியே, தொடர வேண்டும். மத்திய அரசால் உத்தேசிக்கப்பட்டு உள்ளதாக அறியப்பட்ட, இரண்டு மாற்றங்களும் பாதகமானவை' என, குறிப்பிட்டிருந்தார். முதல்வரின் கடிதத்திற்கு, மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி, இம்மாதம், 3ம் தேதி, பதில் எழுதி உள்ளார். அதில், 'மத்திய அரசின், தற்போதைய வட்டி மானிய திட்டப்படி, 2016 மார்ச் வரை, குறுகிய கால பயிர்க்கடன்களுக்கு, வட்டி மானியம் தொடர்ந்து வழங்கப்படும்' என, தெரிவித்துள்ளார்.

மேலும், இது தொடர்பாக, மத்திய அரசின் வேளாண் துறையால், ஒரு குழு அமைக்க, மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளதாகவும், இக்குழு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படும், கடன்களை மேம்படுத்தவும், வட்டி மானிய திட்டத்தின் நிதி ஆதாரங்களை, அதிக அளவில் பயன்படுத்தவும் பரிந்துரைக்கும்.

இப்பொருள் தொடர்பாக, மாநில அரசுகளுடன், கலந்தாலோசனை மேற்கொள்வதற்கான, விவாத குறிப்புகளை, 'நிடி ஆயோக்' அமைப்பு, தயாரித்து வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம், இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகள், தடையில்லாத, குறுகிய கால விவசாய கடன் பெற, வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில், கூட்டுறவு வங்கி மூலமாக, 2014 - 15ல், 10 லட்சம் விவசாயிகளுக்கு, 5,000 கோடி ரூபாய், கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இலக்கை தாண்டி, கூடுதலாக, 280 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு, 11 லட்சம் விவசாயிகளுக்கு, 5,500 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்க, தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

## வாய்க்கால்களுக்கு மேட்டூர் அணை திறப்பு

சென்னை: மேட்டூர் அணையில் இருந்து, புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் பாசனத்திற்கு, இன்று முதல் தண்ணீர் திறந்து விட, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

மேட்டூர் அணையில் இருந்து, புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால்களின் பாசனத்திற்கு, தண்ணீர் திறந்து விடும்படி, திருச்சி, அரியலூர், தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

அதை ஏற்று, இன்று முதல் தண்ணீர் திறந்து விட, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதனால், மூன்று மாவட்டங்களில், 43 ஆயிரம் ஏக்கர் நிலங்கள், பாசன வசதி பெறும்.

அதேபோல், மேட்டூர் அணையில் இருந்து, மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்கு கரை கால்வாய் பாசனத்திற்கு, இன்று முதல் தண்ணீர் திறக்கப்படுவதால் ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்டங்களில், 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள், பாசன வசதி பெறும்.

## 'பழுக்க வைக்க 'கார்பைடு' பயன்படுத்துவது தீவிரவாத செயலை காட்டிலும் பயங்கரமானது'




திருப்பதி: 'கார்பைடு' ரசாயன பொருளை பயன்படுத்தி, பழங்களை பழுக்க வைப்பது, தீவிரவாத செயலை காட்டிலும் பயங்கரமானது என, ஆந்திர ஐகோர்ட் தெரிவித்து உள்ளது.

இதுகுறித்து, ஐகோர்ட், தன் தீர்ப்பில் உத்தரவிட்டு இருப்பதாவது:

காயாக உள்ள பழங்களை, உடனடியாக பழுக்க வைக்க, கார்பைடு என்ற ரசாயன பொருள், பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், அவ்வாறு பழுக்க வைக்கும் பழங்களை உண்பதால், பல பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன. ரசாயனத்தை பயன்படுத்தி, பழங்களை பழுக்க வைக்கும்

முறை, தீவிரவாத செயலை காட்டிலும், மிகவும் பயங்கரமானது. அதனால், ஆந்திரா, தெலுங்கானாவில், கார்பைடு பயன்படுத்தி, பழங்களை பழுக்க வைக்கும் முறைக்கு, தடை விதிக்கப்படுகிறது. கார்பைடு ரசாயன பொருளுக்கு, தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அது, வியாபாரிகளுக்கு எப்படி கிடைக்கிறது எனக் கண்டறிய, பழக் கடைகளில், அதிரடி சோதனை நடத்த வேண்டும். இவ்வாறு ஆந்திர ஐகோர்ட், இரு மாநில அரசுகளுக்கும் உத்தரவிட்டது.

கோர்ட் உத்தரவுப்படி, நடத்தப்பட்ட சோதனையில், ஆந்திர பழ சந்தையில், எவ்வித ரசாயன பொருளும் கிடைக்கவில்லை. தெலுங்கானா பழ சந்தையில் நடத்திய சோதனையில், கார்பைடு கைப்பற்றப்பட்டதாக, அம்மாநில அரசு தெரிவித்தது. கார்பைடு பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்க, இரு மாநில அரசுகளும் எடுக்கும் நடவடிக்கை குறித்து, உடனடியாக தெரியப்படுத்த வேண்டும் என்றும், ஐகோர்ட் உத்தரவிட்டு உள்ளது

## மன நோய்களுக்கு மருந்தாகும் மீன் மாத்திரை

மீன் எண்ணெய்யில் காணப்படும் ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் மன நோய்களுக்கு மருந்தாவதாக சமீபத்திய ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. மீன் எண்ணெய் மாத்திரைகளை 12 வார காலத்திற்கு கொடுத்ததில் பெரும்பாலானவர்களுக்கு மனப் பாதிப்புகள் மற்றும் மன நோய்கள் தடுக்கப்படுவது உறுதியாகி உள்ளது.



நோய் எதிர்ப்பு சக்தியை கூட்டுவதற்காக மக்களிடையே பரவலாக மீன் எண்ணெய் மாத்திரைகள் உண்ணப்பட்டு வருகின்றன. இவற்றில் உள்ள ஆல்பா லீனோலிக் போன்ற அமிலங்கள் மனித உடம்பின் செல் சவ்வுகளில் காணப்படுகின்றன. இவை ஹார்மோன்கள் சுரக்க செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு சுகாதார நிறுவனம் ஒன்று நடத்திய கருத்து கணிப்பில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இயற்கை வைத்தியத்திற்காக மீன் எண்ணெய் மாத்திரைகளை தேர்வு செய்வது தெளிவாகி உள்ளது. ஆண்டு தோறும் அமெரிக்கர்கள் 120 கோடி டாலர்களை செலவழிப்பதாக அந்த கருத்துக் கணிப்பில் மேலும் தெளிவாகிறது.

ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் பல்கலை பேராசிரியர் பால் ஆம்னிகர் இது சம்பந்தமாக ஓர் ஆய்வினை மேற்கொண்டார். இதில் 13 முதல் 25 வயதுக்குட்பட்ட மன நலம் பாதிக்கப்பட்ட நபர்கள் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டனர். மொத்தம் 81 பேரில் 41 பேருக்கு மீன்

எண்ணெய்யும், மீதி 40 பேருக்கு சாதரண மன நல சிகிச்சையும் கொடுக்கப்பட்டது. மீன் எண்ணெய் கொடுக்கப் பட்ட 41 பேரில் 39 பேருக்கு மன ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் தெரிந்தது. சாதாரண சிகிச்சை அளிக்கப்பட்டவர்களில் 29 பேருக்கு மட்டுமே மன ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது.

## இலவச மரக்கன்றுகள் பெற விவசாயிகளுக்கு அழைப்பு

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர் தாலுகா பகுதி விவசாயிகள் இலவச மர கன்றுகளை பெற்று பயன்பெறுமாறு வனசரக அலுவலர் சரவணன் கேட்டுக் கொண்டுள்ளார்.தமிழ்நாடு உயிர்பன்மை மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின் கீழ், உளுந்தூர்பேட்டை வனவியல் விரிவாக்க மையத்தின் மூலம் மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டம் செயல் படுத்தப்படுகிறது. இதற்காக இந்த பருவ காலத்தில்(ஆகஸ்ட்-செப்டம்பர்) உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர் தாலுகாவிலுள்ள விவசாயிகளுக்கு 2 லட்சம் மரக்கன்றுகள், இலவசமாக வழங்கப்பட உள்ளது.இதன்படி தேக்கு, குமிழ், பூவரசம், சிவப்பு சந்தனம், வேங்கை, பலா உள்ளிட்ட மரக்கன்றுகள் என ஒரு ஏக்கர் பரப்பளவுக்கு 200 மரக்கன்றுகள் வீதம் விவசாயிக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.இலவச மரக்கன்றுகளை பெற விரும்பும் விவசாயிகள் சிட்டா, ரேஷன் கார்டு நகல்கள், 2 பாஸ்போர்ட் புகைப்படங்கள் ஆகியவற்றுடன், உளுந்தூர்பேட்டை நகர் பகுதியிலுள்ள வனவியல் விரிவாக்க மையத்தில் விண்ணப்பிக்கலாம்,இதேபோல் புத்தமங்கலம், திருக்கோவிலூர் தாலுகா பகுதி விவசாயிகள் காட்டுசெல்லூர் கிராமத்திலும் மரக்கன்றுகளை பெற்று கொள்ளலாம். சிறப்பாக மரக்கன்றுகள் வளர்ப்போருக்கு 2 ஆண்டுக்கு பிறகு மான்ய உதவிகள், ஊக்க தொகை, பரிசுகளும் வழங்கப்படுகிறது.மேலும் விபரங்களை அறிய வனசரக அலுவலர் சரவணன், மொபைல் எண் (98944 49495) மூலம் தொடர்பு கொள்ளலாம்.

**தமிழகத்தில் பருப்பு வகைகளின் விலை கிடுகிடு: வடமாநில பயிறு, பருப்பு வரத்து கடும் சரிவு**

சேலம்: வடமாநில துவரை, துவரம் பருப்பின் வரத்து சரிந்துள்ள நிலையில், பெரிய வியாபாரிகளின் பதுக்கலால், துவரம் பருப்பு விலை, இரண்டு வாரத்தில் குவிண்டாலுக்கு, 2,100 ரூபாயும், கிலோவுக்கு, 25 ரூபாயும் உயர்ந்து, புதிய உச்சத்தை தொட்டுள்ளது.

தமிழகத்துக்கு தேவையான பருப்பு வகைகள், மஹாராஷ்டிரா, குஜராத், மத்திய பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வருகிறது. வடமாநிலங்களில், இரு மாதங்களாக பெய்து வரும் மழையால், பருப்பு விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், தமிழகத்திற்கு வரும் பயிறு, பருப்பின் வரத்து சரிந்துள்ளது. டாலர் மதிப்பில் ஏற்பட்டு வந்த நிலையில்லா தன்மையால், பர்மா, மலேசியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து தமிழகம் பிற மாநிலங்களுக்கு, விற்பனைக்கு வரும் பருப்பு ரகங்களின் வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது. ஆக.,5 நிலவரப்படி துவரம் பருப்பு, முதல் ரகம் குவிண்டால், 13,200 ரூபாய், இரண்டாம் ரகம், 12,900 ரூபாய், மூன்றாம் ரகம், 12,800 ரூபாய்க்கு விற்பனையானது. ஆக.,17ல் குவிண்டாலுக்கு, 1,200 ரூபாய் வரை, உயர்ந்து, முதல் ரகம் குவிண்டால், 14,400 ரூபாய், இரண்டாம் ரகம், 14,100 ரூபாய், மூன்றாம் ரகம், 14,000 ரூபாய்க்கு விற்பனையானது. இந்நிலையில், நேற்று குவிண்டாலுக்கு மேலும், 800 ரூபாய் அதிகரித்துள்ளது. மொத்த விலையில், முதல் ரகம் குவிண்டால், 15,200 ரூபாய், இரண்டாம் ரகம், 14,900 ரூபாய், மூன்றாம் ரகம், 14,800 ரூபாய்க்கு விற்பனையானது. வடமாநில துவரம் பருப்பின் வரத்து முற்றிலும் நின்று விட்ட நிலையில், வியாபாரிகளின் பதுக்கலும் அதிகரித்துள்ளதால், மார்க்கெட்டில் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நிமிடத்துக்கு நிமிடம் விலை உயர்ந்து வருகிறது. கடந்த, 15 நாளில், துவரம் பருப்பு விலை, குவிண்டாலுக்கு, 2,100 ரூபாயும், கிலோவுக்கு, 25 ரூபாய் வரை, உயர்ந்துள்ளது. உளுந்தம் பருப்பின் விலை குவிண்டாலுக்கு, 1,000 ரூபாயும், பாசிப் பருப்பின் விலை, குவிண்டாலுக்கு, 400 ரூபாயும் உயர்ந்துள்ளது.

* உளுந்தம் பருப்பு, மொத்த விலையில், முதல் ரகம் குவிண்டால், 12,200 இருந்து, 13,200 ரூபாய், இரண்டாம் ரகம், 11,900 இருந்து, 12,900 ரூபாய், மூன்றாம் ரகம், 11,500 இருந்து, 12,500 ரூபாயாக உயர்ந்துள்ளது.

* பாசிப் பருப்பு மொத்த விலையில் முதல் ரகம் குவிண்டால், 9,400 இருந்து, 9,800 ரூபாய், இரண்டாம் ரகம், 9,000 இருந்து, 9,400 ரூபாய், மூன்றாம் ரகம், 8,700 ரூபாய்க்கு விற்றது, 9,100 ரூபாயாக உயர்ந்துள்ளது.

பதுக்கல் அதிகரிப்பு: சேலம், லீபஜாரை சேர்ந்த பருப்பு வியாபாரி சத்தியமூர்த்தி கூறியதாவது: தமிழகத்தில் மட்டுமின்றி, வடமாநிலங்களிலும் பண்டிகை சீஸன் துவங்கி உள்ளதால், பருப்பின் தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அனைத்து ரக பருப்பின் விலையும் உயர வாய்ப்புள்ளது. தற்போதைய நிலை தொடரும் பட்சத்தில், செப்டம்பர் முதல் வாரத்தில், துவரம் பருப்பு விலை கிலோ, 200 ரூபாயை தொட்டு விடும். பருப்பு விலையை மத்திய, மாநில அரசுகள் கட்டுப்படுத்த நினைத்தால், பருப்பு பதுக்கலில் ஈடுபடும் வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுத்தாலே, மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் பருப்பின் வரத்து அதிகரித்து, விலை சரியவோ, கட்டுக்குள் வரவோ வாய்ப்பு உள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## தம்மம்பட்டியில் 44.30 மி.மீ., மழை

தம்மம்பட்டி: தம்மம்பட்டி அதன் சுற்றுவட்டார பகுதியில், பருவ மழை பொய்த்து போனதால், விளை நிலங்கள் வானம் பார்த்த பூமியாக காட்சி அளித்தது. இதனால், விவசாயிகள் பட்டத்தில், பயிர் செய்ய முடியாமல், மழையை எதிர்பார்த்து, நிலங்களை உழவு செய்து, பயிர் செய்ய தயார் நிலையில் வைத்திருந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை, 4.25 மணியளவில், தம்மம்பட்டி, கெங்கவல்லி பகுதியில் திடீரென மழை கொட்டி தீர்த்ததால், வயல்வெளியில் தண்ணீர் தேங்கியும், சாலையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.நேற்று காலை நிலவரப்படி, தம்மம்பட்டி, 44.3 மி.மீ., கெங்கவல்லி, 20.3 மி.மீ மழையளவு பதிவானது.

## மேட்டூர் அணை நீர்வரத்து 12,280 கன அடியாக உயர்வு

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 12 ஆயிரத்து, 280 கனஅடியாக அதிகரித்தது. கடந்த, 9ம் தேதி மேட்டூர் அணை நீர்மட்டம், 96.510 அடியாகவும், நீர் இருப்பு, 60.411 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. கடந்த, 9ம் தேதி முதல் டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 13 ஆயிரம் கனஅடி நீர் வெளியேறுவதாலும், நீர்வரத்து குறைந்ததால், மேட்டூர் அணை நீர்மட்டம் சரிய துவங்கியது. இந்நிலையில், நேற்று நீர்மட்டம், 91.130 அடியாக சரிந்தது. கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் இருந்து கரையோர பாசனத்துக்காக காவிரியாற்றில் திறக்கப்பட்ட நீரின் ஒரு பகுதி, தொடர்ச்சியாக மேட்டூர் அணைக்கு வருகிறது. நேற்று முன்தினம், 10 ஆயிரத்து, 545 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று, 12 ஆயிரத்து, 280 கனஅடியாக அதிகரித்தது.

நீர்வரத்து அதிகரித்ததால், மளமளவென சரிந்த நீர்மட்டம், இரண்டு நாட்களாக மெதுவாக சரிந்து வருகிறது. அதற்கேற்ப, நேற்று முன்தினம், 91.200 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று, 91.130 அடியாக சரிந்தது குறிப்பிடத்தக்கது.

## பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி: 50% மானியம் வழங்க முடிவு

நாமக்கல்: "தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், மண் வளத்தை மேம்படுத்திட பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, மானியமாக, 50 சதவீதம் வழங்கப்படும்' என, வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜீ தெரிவித்துள்ளார்.

அவர், வெளியிட்ட அறிக்கை: தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், மண் வளத்தை அதிகரிக்க பசுந்தாள் உரப்பயிர்களாகிய தக்கைப்பூண்டு, சணப்பு, கொளுஞ்சி ஆகிய பயிர்களை சாகுபடி செய்து, 50 சதவீதம் பூக்கும் நிலையில், மடக்கி, உழவு செய்யும் விவசாயிகளுக்கு, பின்னேற்பு மானியமாக, செலவில், 50 சதவீதம் தொகை வழங்கப்படும். பசுந்தாள் உர விதைக்கான விண்ணப்பத்தை, சம்பந்தப்பட்ட வேளாண் உதவி அலுவலர் மூலம், கபிலர்மலை வேளாண் விரிவாக்க மையத்தில் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட விண்ணப்பத்தை பரிசீலனை செய்து, 50 சதவீதம் தொகை விவசாயிகள் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். ஒரு ஹெக்டருக்கு, அதிக பட்சமாக, 2,000 ரூபாய், 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும். ஒரு விவசாயி, இரண்டு ஹெக்டருக்கு மானியம் பெறும் தகுதி உள்ளவர். விவசாயிகள், பெறப்பட்ட விதைக்கான ரசீது, கம்ப்யூட்டர் சிட்டா, அடங்கல், பாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ, பசுந்தாள் பயிர் சாகுபடி செய்துள்ளதற்கான புகைப்படம் ஆகியவற்றுடன், வட்டார வேளாண்

விரிவாக்க மையத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், தங்களது வங்கி கணக்கு எண் இணைத்து வழங்க வேண்டும். விண்ணப்பம் பரிசீலனை செய்து, உங்கள் வங்கி கணக்கில் மானியத்தொகை செலுத்தப்படும். தற்போது, பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்ய உகந்த பருவம் என்பதால், கபிலர்மலை வட்டார விவசாயிகள், மானியம் பெறலாம். இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது

## கால்நடை மருத்துவக் கல்லூரியில் 2016 பிப்., வரை இலவச பயிற்சி

நாமக்கல்: "கால்நடைகளுக்கான அடர் தீவனம் தயாரித்தல், மதிப்புக்கூட்டிய பால் பொருட்கள் தயாரித்தல் குறித்த செயல்திறன் பயிற்சி, இம்மாதம் முதல், வரும், 2016, ஃபிப்ரவரி வரை இலவசமாக வழங்கப்படும்' என, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் குணசீலன் தெரிவித்துள்ளார்.

அவர், வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், கால்நடைகளுக்கான அடர் தீவனம் தயாரித்தல், கால்நடைத் தீவன ஆலை இயக்கம் மற்றும் மேலாண், மதிப்புக் கூட்டிய பால் பொருட்கள் தயாரித்தல், பால் பதன நிலைய இயக்கம் மற்றும் மேலாண், கோழிக்குஞ்சு பொரித்தல் மேலாண், கோழிகளுக்கு தடுப்பூசி போடுதல் ஆகிய செயல் திறன் பயிற்சிகள், நடப்பு மாதம் முதல், 2016, பிப்ரவரி வரை, இலவசமாக நடத்தப்படுகிறது. பயிற்சியில், வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்கள், உயர்க்கல்வி தொடர முடியாதவர்கள், கால்நடை மற்றும் கோழிவளர்ப்பில் அனுபவம் உள்ளவர்கள், சுயதொழில் முனைவோர் பங்குபெற்று பயன் பெறலாம். பயிற்சிகளில் பங்கு பெற விருப்பம் உள்ளவர்கள், எஸ்.எஸ்.எல்.ஸி., தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும். மேலும், 18 முதல், 45 வயதுக்கு

மிகாமல் இருக்க வேண்டும். பயிற்சி கட்டணம் எதுவும் இல்லாமல், இலவசமாக வழங்கப்படுகிறது. பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு, உணவு மற்றும் தங்கும் வசதியை, தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். ஒரு நபருக்கு உணவு மற்றும் போக்குவரத்துக்கான உதவித்தொகை, 2,250 ரூபாய் வழங்கப்படும். இதில், பங்குபெற விரும்புகிறவர்கள், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் அலுவலகத்தை நேரிலோ அல்லது தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு, பயிற்சிக்கான விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

### சிறு தேயிலை விவசாய சங்கம் துவக்கம்

மஞ்சூர் : மஞ்சூர் அடுத்துள்ள எடக்காடில், ராமகிருஷ்ணா சிறு தேயிலை விவசாயிகள் சங்கத்தின் துவக்க விழா நடந்தது. இதில், காயிகள் சங்கத்தின் வளர்ச்சி அலுவலர் புவனேஷ் வரவேற்றார்.

குந்தா தேயிலை வாரியத்தின் உதவி இயக்குனர் ரமேஷ், தேயிலை வாரியம் வழங்கும் பல்வேறு மானியங்கள் பற்றி பேசினார். பின்னர், ஸ்ரீ ராமகிருஷ்ணா சிறு தேயிலை விவசாய சங்கத்தின் தலைவர் பீமராஜ் சங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து விளக்கினார். பின்பு, விஞ்ஞானி சுகுணா 'சில்வர்டிப்' தேயிலை தயாரிப்பு பற்றி பேசினார். சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட தேயிலை வாரிய செயல் இயக்குனர் பால்ராசு பேசுகையில்,“தேயிலை வாரியத்தின் மூலம் துவங்கப்பட்டுள்ள அனைத்து சிறு விவசாய சங்கங்களும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

தேயிலை வாரியத்தின் மானியங்களான, வாகனம், இலைப்பை, எடை தராசு, தேயிலை கொள்முதல் நிலையம், உரம் சேமிப்பு கிடங்கு,

கொழுந்து எடுக்கும் இயந்திரம் மற்றும் நேரடி உரம் கொள்முதல் செய்ய சுழல் நிதி ஆகியன இந்த சங்கத்திற்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும். அதனால், இந்த வாய்ப்பை சிறு விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்” என்றார்.

தேயிலை வாரியத்தின் இணை இயக்குனர் ஹரிபிரகாஷ் உட்பட தேயிலை வாரிய ஊழியர்கள்பலர் கலந்துகொண்டனர். எடக்காடு கிராம தலைவர் தர்ஜி நன்றி கூறினார்.

## ஆவணி மாதம் துவக்கம்: பூக்கள் விலை உயர்வு

திருச்சி: ஆவணி மாதம் துவங்கியுள்ள நிலையில், திருச்சியில் பூக்களின் விலை உயர்ந்துள்ளது. ஆடி மாதத்தில், திருமணம் உள்ளிட்ட வீட்டு சுப நிகழச்சிகள் அதிகளவில் நடக்க வாய்ப்பில்லை. இதனால், பூக்கள் விலை குறைந்து காணப்பட்டது. நேற்று முன்தினம் ஆவணி மாதம் துவங்கியது. மேலும், இன்று சுப முகூர்த்த நாளாக உள்ளது. இதனால், பூக்களின் விலை உயர துவங்கியுள்ளது. திருச்சி காந்தி மார்கெட், ஸ்ரீரங்கம் மார்கெட்டுகளுக்கு, குழுமணி, கோப்பு, வாத்தலை, மண்ணச்சநல்லூர், மணப்பாறை, துறையூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பூக்கள் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது. ஒரு கிலோ மல்லிகை பூ, 150 ரூபாயில் இருந்து, 200 ரூபாய்க்கும், கனகாம்பரம், 300 ரூபாயில் இருந்து, 600 ரூபாய்க்கும், முல்லை பூ, 200 ரூபாயில் இருந்து, 250 ரூபாய்க்கும், ஜாதி பூ, 140 ரூபாயில் இருந்து, 200 ரூபாய்க்கும், சம்பங்கி பூ, 150 ரூபாயில் இருந்து, 300 ரூபாய்க்கும், கோழி கொண்டை, 30 ரூபாயில் இருந்து, 50 ரூபாய்க்கும் நேற்று காந்தி மார்கெட் மற்றும் ஸ்ரீரங்கம் மார்கெட்டில் விற்பனை செய்யப்பட்டது.

## மகசூல் அதிகரிக்க விதைப்பு கருவி: அதிகாரி வலியுறுத்தல்

வடமதுரை : "விதைப்பு கருவி பயன்படுத்தி விதைப்பு பணி செய்தால் மகசூல் அதிகரிக்கும்' என, வடமதுரை வேளாண்மை உதவி இயக்குனர் ராணி தெரிவித்தார்.

பாடியூர் அருகே இ.புதூரில் வேளாண்மைத்துறை சார்பில் விதைப்பு கருவியை பயன்படுத்தி நிலக்கடலை, துவரை விதைப்பு பணி செயல்விளக்க முகாம் நடந்தது.

இணை இயக்குனர் சம்பத்குமார், துணை இயக்குனர் தவமுனி தலைமை வகித்தனர். உதவி இயக்குனர் ராணி பேசுகையில், விதைப்பு கருவி மூலம் விதைக்கும் போது, விதைகள் வரிசையாகவும், ஒரே ஆழத்திலும் சீராக விதைக்கப்படுகிறது. ஒவ்வொரு பயிருக்கும் இடைவெளி பராமரிக்கப்படுவதால் மகசூல் அதிகரிக்கும். விதைப்பு செலவினம், நேரம் குறையும். கடலையுடன் துவரையை ஊடுபயிராக விதைப்பதன் நோக்கம், கடலையை தாக்கக் கூடிய சிவப்பு கம்பளி புழுவின் தாய்பூச்சிகள் துவரையில் முட்டையிடும். இவற்றை ஆரம்ப காலத்திலேயே சேகரித்து புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். இரு பயிர்களின் மகசூலினால் விவசாயிகளுக்கு நிகர லாபம் அதிகமாகும்.

மான்யம்: தேசிய வேளாண் எண்ணெய்வித்து வளர்ச்சி திட்டத்தில், வடமதுரைக்கு 250 எக்டேர் பரப்பு இலக்கு தரப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சேரும் விவசாயி ஒன்று முதல் 2 எக்டேர் வரை விதைப்பு மானியம் பெறலாம். 1 எக்டேருக்கு ரூ.ஆயிரம் வங்கி கணக்கில் செலுத்தப்படும். ஆர்வமுள்ள விவசாயிகள் தங்களது ஆதார் எண், வங்கி கணக்கு புத்தக முன்பக்க நகலுடன் உதவி வேளாண்மை அலுவலர்கள் அல்லது விரிவாக்க மையத்தை அணுகலாம்' என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழகத்தின் சில இடங்களில் மழைக்கு வாய்ப்பு**

தமிழகம், புதுவையின் சில இடங்களில் வியாழக்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் வெப்பச் சலனத்தின் காரணமாக சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வியாழக்கிழமையும் மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம், புதுவையில் ஆங்காங்கே மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டமாக இருக்கும். மாலை அல்லது இரவில் சில இடங்களில் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யும்.

இந்த நிலையில், புதன்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் அதிராமபட்டினத்தில் 90 மி.மீ. மழையும் தக்களையில் 80 மி.மீ. மழையும் பெய்துள்ளது. முத்துப்பேட்டையில் 50 மி.மீ. மழையும் தம்மம்பட்டி, குழித்துறையில் 40 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

இதேபோல, பட்டுக்கோட்டை, வால்பாறை, அஞ்செட்டி, பேராவூரணி (30 மி.மீ.), தஞ்சாவூர், திருவிடைமருதூர், பாபநாசம், பேச்சிப்பாறை, கும்பகோணம் (20 மி.மீ.), மதுரை, பரமக்குடி, ஒரத்தநாடு, ஏற்காடு,

சின்னக்கல்லாறு (10 மி.மீ.) உள்ளிட்ட இடங்களிலும் மழை பெய்துள்ளது.

**குமரியில் ரப்பர் விலை கடும் வீழ்ச்சி: விவசாயிகள் கவலை**

குமரி மாவட்டத்தில் ரப்பரின் விலை கிலோ ரூ. 100-க்கும் கீழ் சரிந்துள்ளதால் உற்பத்தியாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

குமரி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் மக்களின் பிரதான தொழில் ரப்பர் உற்பத்தியாகும். இப்பகுதியில் ஏறக்குறைய 50 ஆயிரம் ஏக்கரில் ரப்பர் தோட்டங்கள் உள்ளன. அதில்,அரசுக்குச் சொந்தமான தோட்டம் 5000 ஏக்கர் பரப்பாகும். இங்கு சிறு மற்றும் குறு விவசாயிகள் பெருமளவில் ரப்பர் பயிரிட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தின் பொருளாதாரத்தைத் தீர்மானிப்பதில் ரப்பருக்கு முக்கியப் பங்கு உண்டு. பெரும்பாலும் ரப்பரிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டே இதரத் தொழில் துறைகள் இயங்குகின்றன.

கடந்த 2013ஆம் ஆண்டுக்கு முன்பு கிலோ ரூ. 250வரை விற்கப்பட்ட உலர் ரப்பரின் விலை படிப்படியாக சரிவடைந்து தற்போது கிலோ ரூ. 97-க்கு வந்துள்ளது. இதனால், ரப்பர் உற்பத்தியாளர்கள் மட்டுமன்றி, அனைத்துத் தொழில்துறையினரும் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

விலை வீழ்ச்சிக்கு காரணம்: ரப்பர் விலை சரிவுக்கு கச்சா எண்ணெயின் விலை வீழ்ச்சியும்,முக்கிய ரப்பர் உற்பத்தி நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளில் ரப்பரின் விலை வீழ்ச்சியும் முக்கிய காரணங்களாக ரப்பர் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் கவலை: மலைப் பகுதிகளில் மட்டுமே நடவு செய்யப்படக்கூடிய தோட்டப் பயிரான ரப்பர் மரங்கள், அதன் வருவாய்

கொழிப்பு காரணமாக நன்செய், புன்செய் நிலங்களுக்கும் பரவியது. குறிப்பாக 2010 இல் ரப்பர் விலை உச்சத்தில் இருந்தபோது, தென்னை மரங்கள் முழுமையாக அழிக்கப்பட்டு ரப்பர் நடவு செய்யப்பட்டது.

தற்போது உற்பத்திச் செலவுக்கு கூட கட்டுபடியாகாமல் ரப்பர் விலை ரூ. 100-க்கும் கீழே வந்துள்ளதால் ரப்பர் விவசாயிகள் நம்பிக்கை இழந்துள்ளனர். தென்னந் தோப்புகளை அழித்து ரப்பரை நடவு செய்தவர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளதாக கருதுகின்றனர்.

இறக்குமதிக்கு கட்டுப்பாடு: இது குறித்து முன்னோடி ரப்பர் உற்பத்தியாளர் ஜி. கிருஷ்ணன் நம்பூதிரி கூறியதாவது:

ரப்பர் விலை வீழ்ச்சி தொடர்வது, அதன் உற்பத்தியாளர்களை தொழில் மீதான நம்பிக்கையை நிலைகுலையச் செய்துள்ளது. இந்நிலை நீடித்தால் உற்பத்தியாளர்கள் ரப்பர் பால் வடிப்பதை நிறுத்தும் நிலையும், வேலையில்லா திண்டாட்டம் உள்ளிட்ட பிரச்னைகளும் விரைவில் ஏற்படும்.

கேரளத்தில் கிலோ ரப்பருக்கு குறைந்தபட்ச விலை ரூ.150 என நிர்ணயித்து அதற்குரிய மானியத்துக்காக ரூ.300 கோடி மதிப்பிலான நிதியத்தை ஏற்படுத்தியுள்ளனர். ஆனால், இந்த நடைமுறையும் நிரந்தர பலனளிக்காது.

ரப்பர் விலை வீழ்ச்சியைத் தடுப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் உறுதியான நடவடிக்கை எடுப்பதே சிறந்த வழியாகும். முதல்கட்டமாக, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஒட்டுமொத்த ரப்பரையும் கொள்முதல் செய்த பிறகே வெளிநாடுகளிலிருந்து ரப்பர் இறக்குமதிக்கான அனுமதி அளிக்க வேண்டும். மேலும், ரப்பர் முழு வேளாண் விளை பொருளாகக் கருதி மானிய உதவிகளை வழங்க வேண்டும் என்றார் அவர்.

**விவசாயக் கடன் வட்டி மானியத் திட்டம்: ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்றது மத்திய அரசு**



விவசாயிகளின் பயிர்க் கடன்களுக்கான வட்டி மானியத் திட்டம் தொடர வேண்டும் என்ற முதல்வர் ஜெயலலிதாவின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இது குறித்த தகவலை மத்திய வேளாண்மைத் துறை அமைச்சகம், தமிழக அரசிடம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து தமிழக அரசு புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: விவசாயிகளின் குறுகிய கால பயிர்க்கடன் வட்டி மானியத் திட்டத்தை நிகழ் நிதியாண்டில் கடந்த ஜூன் வரை மட்டும் மத்திய அரசு நீட்டித்து மாற்றுத் திட்டத்தை ஆலோசித்து வந்தது. இந்த நிலையில், தமிழக அரசு சார்பில் இது தொடர்பான கடிதம் கடந்த ஏப்ரலில் அனுப்பப்பட்டது. இதைத் தொடர்ந்து, கடந்த ஜூன் 20 ஆம் தேதியன்று, முதல்வர் ஜெயலலிதா பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில், விவசாயிகளுக்கான குறுகிய கால பயிர்க் கடன் வட்டி மானியத் திட்டத்தில், தற்போதுள்ள நடைமுறைகளின்படியே தொடர வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தி எழுதியிருந்தார். மத்திய அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்ட இரண்டு மாற்றங்களும்

பாதகமானவை என்று அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

மேலும் தனது கடிதத்தில், எதிர்பாராத நிகழ்வுகளுக்கு உள்படும் வேளாண்மைப் பணிகளை மேற்கொள்ளும்போது, தற்போது வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி விகிதங்களை உயர்த்துவதோ அல்லது விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளைக் குறைப்பதோ தேவையற்றதாகும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வரும் விவசாயிகளுக்கான இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, பிரதமர் நேரடியாகத் தலையிட்டு, இந்தத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் குறித்து, தொடர்புடைய அனைவரிடமும் கலந்தாலோசனை மேற்கொண்டு, விவசாயிகளுக்கு அதிக பயன் தரக்கூடிய வகையில் திட்டம் அமையவேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

முதல்வர் ஜெயலலிதாவின் கடிதத்துக்கு, மத்திய நிதி அமைச்சர் பதில் அனுப்பியுள்ளார். அதில், மத்திய அரசு தற்போதுள்ள வட்டி மானியத் திட்டத்தின்படி அடுத்த ஆண்டு மார்ச் வரை குறுகிய கால பயிர்க் கடன்களுக்கு வட்டி மானியம் தொடர்ந்து வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். மேலும், இது தொடர்பாக, மத்திய அரசின் வேளாண்மைத் துறையால் ஒரு குழு அமைக்க மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளதாகவும், இந்தக் குழு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன்களை மேம்படுத்தவும், வட்டி மானியத் திட்டத்தின் நிதி ஆதாரங்களை அதிக அளவில் பயன்படுத்தவும் பரிந்துரைக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

முதல்வர் ஜெயலலிதா மேற்கொண்ட முயற்சியால் இந்தியா முழுவதுமுள்ள விவசாயிகள், தடையில்லாத குறுகிய கால விவசாயக் கடன் பெற வழிவகை ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 2014-2015-ஆம் நிதி

ஆண்டில் 10 லட்சத்து 36 ஆயிரத்து 859 விவசாயிகளுக்கு, ரூ.5,000 கோடி என நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட கூடுதலாக, ரூ.5,279.91 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. நிகழ் ஆண்டில் (2015-2016) 10 லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ.5,500 கோடி பயிர்க்கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என தமிழக அரசின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 12 ஆயிரம் கன அடியாக அதிகரிப்பு**

காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து புதன்கிழமை காலை நொடிக்கு 12 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக மழை பெய்து வருகிறது. இதனால், கடந்த சனிக்கிழமை முதல் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதையடுத்து, புதன்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 12,280 கன அடியாக அதிகரித்தது. இதனால், அணையின் நீர்மட்டம் சரிவிலிருந்து மீண்டது. இதையடுத்து, அணையின் நீர்மட்டம் 91.13 அடியாக இருந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 13 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 53.95 டி.எம்.சி.யாக இருந்தது. கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு: அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதால், மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்கு வியாழக்கிழமை முதல் தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனம் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு

மாவட்டங்களில் 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1-ஆம் தேதி கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். நிகழாண்டில் ஆகஸ்ட் 1-ஆம் தேதி அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால், கால்வாய் பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. தற்போது, நீர்வரத்து அதிகரித்திருப்பதால் 19 நாள்கள் தாமதமாக மேட்டூர் அணையிலிருந்து கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

**புதிய தொழில்நுட்பத்தில் நெல் சாகுபடி**





வேளாண் உற்பத்திகளில் தமிழ்நாட்டில் நெல் உற்பத்தி முதன்மையாக விளங்குகிறது. பல்வேறு வகையான நெல் ரகங்களை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். வருகிற சம்பா பருவத்துக்கு ஏற்ற புதிய நெல் ரகங்கள் உள்ளன. இதன் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் (உழவியல்) முருகன் கூறியது:

புதிய நெல் ரகம் (டி.கே.எம்.13): டி.கே.எம். 13 ரகம் மத்திய வயது (135 நாள்கள்) நெல் பயிராகும். மத்திய சன்ன வெள்ளை அரிசி, இலைச் சுருட்டுப் புழு, குறுத்துப் பூச்சி, பச்சை தத்துப் பூச்சிக்கு நடுத்தர எதிர்ப்புத் திறன் கொண்டது.

குலை நோய், துங்குரோ நோய், செம்புள்ளி நோய்க்கு நடுத்தரத் தாங்கும் திறன் கொண்டது. அதிக அரைவை திறன், முழு அரிசி காணும் திறன், சமைத்த சாதம் நீளும் தன்மை அதிகம். சிறந்த சமையல் பண்பு, அதிக மகசூல் (ஒரு ஹெக்டேருக்கு 5.5 முதல் 6.5 டன்கள்). இந்தப் புதிய நெல் ரகத்தை திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிட்டால் கூடுதல் மகசூல் பெற முடியும்.

திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள்: தமிழக வேளாண்மையில் நெல் சாகுபடி ஒரு முக்கிய அங்கமாகும். கடந்த சில ஆண்டுகளாக மொத்த ஆண்டு நெல் உற்பத்தியில் ஒரு தேக்க நிலையில் இருந்து வருகிறது. மக்கள்தொகை தொடர்ந்து பெருகி வருவதால், நெல் உற்பத்தித் திறனை மேலும் அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

நெல் சாகுபடியில் மற்றொரு கவலைக்குரிய நிலை சாகுபடிக்குத் தேவையான நீரின் அளவு குறைந்து பற்றாக்குறை இருப்பதுதான். ஆகையால், நெல் சாகுபடியில் தற்போதைய தேவை, குறைந்த நீரில் அதிக உற்பத்தித் திறன் கொடுக்கக் கூடிய திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப முறை.

திருந்திய நெல் சாகுபடி என்பது சிக்கன நீர்ப்பாசனத்தில் இளநாற்றை அதிக இடைவெளியில், சதுரமுறையில் நடவுசெய்து களைக்கருவியை

உபயோகித்து விளைச்சலை அதிகரிக்கும் மாற்று நெல் பயிர் சாகுபடி முறையாகும். இந்த தொழில்நுட்ப நடைமுறை சாகுபடி சிபாரிசுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். ஆனால், இந்தச் சாகுபடி முறையால் மகசூல் அதிகரிப்பது மட்டுமல்லாமல் வேறு பல நன்மைகளும் விவசாயிகளுக்கு கிடைக்கிறது.

சிக்கன நீர்ப்பாசனம் மூலம் பாசன நீர் தட்டுப்பாட்டைக் குறைக்கும் உத்தியாக மண்ணில் காற்றோட்டத்தையும், நுண்ணுயிர் செயல்பாட்டை மேம்படுத்துவதற்காகவும், தழைச்சத்து தேவையைக் குறைப்பதற்காகவும், நெல்லுடன் வளரும் களைகளை இயற்கை உரமாக மாற்றுவதற்காகவும் விதை நெல்லின் அளவை வெகுவாக குறைப்பதற்காகவும், அதிக தூர்கள், அதிக வேர் வளர்ச்சி கூட்டுப் பயனால் விளைச்சல் அதிகமாகி அதிக லாபம் பெறலாம்.

திருந்திய நெல் சாகுபடியின் முக்கிய அம்சங்கள்: 14 நாள்கள் வயதுடைய வாளிப்பான நாற்றுகளை நடுதல், ஒரு குத்துக்கு ஒரு நாற்றை சதுர முறையில் நடுதல், அதிக இடைவெளி விட்டு சதுர நடவு (25-க்கு 25 செ.மீ.), கோனோவீடர் மூலம் களைகளை அமுக்கி சேற்றை கலக்குதல். நீர் மறைய நீர் கட்டி பாசன நீரின் அளவைக் குறைத்தல். பச்சை வண்ண இலை நிற அட்டை மூலம் தழைச்சத்தை நிர்வகித்தல்.

நாற்றாங்கால் தயாரிப்பு: நடவு வயலின் ஓரத்தில் 1-க்கு 5 மீட்டர் அளவுள்ள 8 மேடைகளை தகுந்த இடைவெளியில் உருவாக்க வேண்டும். மேடைகளை தகுந்த இடைவெளியில் உருவாக்கும்போது இடையே இருக்கும் மண்ணை வெட்டி எடுத்து மேடையை அமைக்க வேண்டும். நிலப்பரப்புக்கு 5 செ.மீ. உயரம் மேடை அமைத்த பின் மேடை மேல் பாலிதீன் தாளையோ அல்லது பிரித்த உரச்சாக்குகளையோ பரப்பிவிட

வேண்டும்.

பிறகு நாற்று மேடை ஒன்றுக்கு 95 கிராம் வீதம் 8 நாற்று மேடைகளுக்குத் தேவையான 760 கிராம் டி.ஏ.பி. உரத்தை நன்கு பொடி செய்து மண்ணுடன் கலந்து நாற்று மேடைகளில் 4 செ.மீ., உயரத்திற்கு நிரப்பிவிட வேண்டும். பின் மூங்கில் குச்சிகளை மேடை ஓரங்களில் படுக்கையில் ஊன்றிவிட்டால் மண்மேடை ஓரங்களிலிருந்து கரைந்து விடாமல் இருக்கும். முளைகட்டிய விதையை (ஒவ்வொரு 5 செ.மீ. மேடைக்கு 375 கிராம் விதை) பரவலாக விதைக்க வேண்டும். நாற்று மேடையை காய்ந்த மண் கொண்டு தயாரித்தால் விதைத்தபின், விதைகள் மூடியிருக்குமாறு 1 செ.மீ. உயரத்திற்கு மண்ணைத் தூவி விடலாம். பூவாளி கொண்டு நீர் தெளிக்கலாம். சுற்றியிருக்கும் பள்ளங்களில் நீர் நிரப்பலாம். பிறகு நாற்றாங்காலை வழக்கமான முறையில் பராமரிக்க வேண்டும்.

நடவு வயல், நாற்று நடவு: நடவு வயல் தயாரிப்பில் திருந்திய நெல் சாகுபடிக்கான மாற்றங்கள் ஏதும் இல்லை. நடவுக்கு 10 நாள்களுக்கு முன்பாக நடவு வயலில் ஏக்கருக்கு 5 டன் நன்கு மக்கிய தொழு உரத்தை சீராகப் பரப்பி நீர்ப்பாய்ச்சி சேறு உழவு செய்ய வேண்டும். 15 நாள்கள் வயதுடைய நாற்றுகளை நடவுக்கு உபயோகிக்க வேண்டும். நாற்றுகளை பத்தைகளிலிருந்து பிரித்து எடுத்து 25-க்கு 25 செ.மீ. இடைவெளியில் ஒவ்வொரு நாற்றாக சதுர நடவாக நட வேண்டும். வேர்கள் மேல்நோக்கி இல்லாமல் 3 செ.மீ. ஆழத்துக்கு மிகாமல் மேலாக நடவு செய்ய வேண்டும்.

இவ்வாறு நடவு செய்வதற்கு நடவுக் கயிற்றில் 25 செ.மீ. இடைவெளியில் அடையாளத்துக்கு கலர் துண்டு துணிகளைக் கட்டி,

நடவுக் கயிற்றை 25 செ.மீ. எனற அளவில் மாற்றி மாற்றி போட்டு நடவு செய்யும்போது 25-க்கு 25 செ.மீ. அளவில் இடைவெளி அமையும். களைக்கருவி உபயோகிப்பது அவசியமாதலால் வரிசை சதுர நடவு முக்கியமானதாகும்.

நீர் மேலாண்மை: 2-க்கு 2.5 செ.மீ. உயரம் நீர் கட்டி, பின் மண்ணின் மேல்பரப்பில் லேசான கீரல் வெடிப்புகள் தோன்றியபின் மறுபடியும் 2-க்கு 2.5 செ.மீ அளவுக்கு நீர் கட்ட வேண்டும். இந்த முறையை பஞ்சு கட்டும் பருவம் வரை மட்டும் செய்ய வேண்டும். அதன் பிறகு, அறுவடைக்கு முன்பு வரை 2-க்கு 2.5 செ.மீ. நீர் கட்டி மண்ணின் மேற்பரப்பில் நீர் மறைந்தபின் மண்ணைக் காயவிடாமல் மறுபடியும் அதே அளவு நீர்கட்ட வேண்டும்.

களை நிர்வாகம்: திருந்திய நெல் சாகுபடியில், களைகளை அவைகளின் இளம் பருவத்திலேயே மண்ணிலேயே அமுக்கி விடப்படுவதால், களைகளால் எடுக்கப்படும் சத்துக்களின் அளவு குறைந்து, நெற்பயிருக்கு சத்துக்கள் அதிக அளவில் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மேலும், சத்துக்கள் அனைத்தும் அந்த மண்ணிலேயே சேர்க்கப்படுகின்றன.

உருளும் களைக்கருவி (ரோட்டரி வீடர்) கொண்டு நட்ட 15, 25, 35 நாள்களில் செடிகளுக்கு ஊடே குறுக்கும் நெடுக்குமாக உபயோகித்தல் வேண்டும். சீரான அளவு நீர் இருக்கும்போது களைக் கருவியை உபயோகிக்க இலகுவாக இருக்கும்.

ஊட்டச்சத்து மேலாண்மை: நெல்லைப் பொறுத்தவரை தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, துத்தநாகம் ஆகியவை முக்கிய ஊட்டச்சத்துக்கள் ஆகும். திருந்திய நெல் சாகுபடியில் தழைச்சத்து

மேலாண்மை மாற்றியமைக்கப்பட்டு பயிருக்குத் தேவையாக இருந்தால் மட்டுமே மேலுரமாக தழைச்சத்து அளிக்கும். இந்தத் தொழில்நுட்பம் இலை நிற அட்டையை உபயோகப்படுத்தி செய்யப்படும். நெற்கதிர் எண்ணிக்கை, மகசூல்: ஒரு குத்தில் அதிகபட்ச அளவு மொத்த தூர்கள் (40 முதல் 45) உண்டாக வாய்ப்புண்டு. ஒவ்வொரு கதிரிலும் மணிகள் அதிக எண்ணிக்கை இருக்கும். சரியான ஊட்டச்சத்து நிர்வாகத்தினால் ஏக்கருக்கு 4.0 - 4.5 டன் வரை மகசூல் கிடைக்கின்றன. திருந்திய நெல் சாகுபடியில் விவசாயிகள் பெறும் பலன்கள்: குறைந்த விதையளவு, நாற்று பறிக்கும் செலவு குறைவு. களைக் கொல்லி தேவையற்றது. உருளும் களைக்கருவி உபயோகிப்பதால் கூட்டுப் பயன்கள், 50 சதம் வரை நீர் சேமிப்பு, கதிர்கள், தானியங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, நெல், வைக்கோல் விளைச்சல் அதிகரிப்பு, அதிக வருமானம் ஈட்டமுடியும். மேலும் விவரங்களுக்கு காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை 044 - 2745 2371 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**புடலங்காய் சாகுபடியில் ஹெக்டேருக்கு 25 டன் மகசூல்**



தமிழகத்தில் எளிதாக பயிராகும் காய் வகைகளில், கொடி வகைத் தாவரமான புடலங்காய் சாகுபடி செய்தால் ஒரு ஹெக்டேருக்கு 20 முதல் 25 டன் வரை மகசூல் பெறலாம் என தோட்டக்கலைத் துறையினர் கூறியுள்ளனர்.

அனைவரும் சமையலுக்குப் பயன்படுத்தப்படும், பூசணி வகை குடும்பத்தைச் சேர்ந்தது புடலங்காய். இது வேகமாக வளரக் கூடியதும், அதிக மகசூல் தரும் பயிராகும்.

மண், தட்ப வெட்ப நிலை: புடலங்காய் ஒரு வெப்ப மண்டலப் பயிராகும். இதன் சாகுபடிக்கு 25 முதல் 30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை தேவைப்படும். இருமண் பாங்கான மண் வகைகள் சாகுபடிக்கு ஏற்றவை. மேலும் மித வெப்ப மண்டலப் பகுதிகளிலும் சாகுபடி செய்யலாம்.

பருவம்: ஜூன்- ஜூலை மாதங்களும், டிசம்பர் -ஜனவரி மாதங்களும் சாகுபடி செய்ய ஏற்ற பருவமாகும்.

நிலம் தயாரித்தல்: நிலத்தை நன்றாக 3 அல்லது 4 முறை உழவு செய்ய வேண்டும்.

கடைசி உழவின்போது 20 டன் மக்கிய தொழு உரத்தை இட்டு 2 மீட்டர் இடைவெளியில் 60 செ.மீட்டர் அகலத்தில் வாய்க்கால் எடுத்து நிலம் தயாரிக்க வேண்டும். அந்த வாய்க்காலில் 1.5 மீட்டர் இடைவெளியில் 45 செ.மீட்டர் நீளம், ஆழம், அகலம் கொண்ட குழிகளை எடுத்து மேல் மண் கலந்து நிரப்பி வைக்க வேண்டும்.

விதையளவு: ஒரு ஹெக்டேருக்கு 1.5 முதல் 2 கிலோ விதையளவு தேவைப்படும். விதையை 2 கிராம் பெவிஸ்டின் என்ற பூஞ்சாண மருந்துடன் விதை நேர்த்தி செய்ய வேண்டும். ஒரு குழிக்கு 5 விதைகள் வீதம் ஊன்ற வேண்டும். விதை நட்ட 8 முதல் 10 நாள்களில் முளைக்கத் தொடங்கிவிடும். ஒரு குழியில் நன்கு வளர்ந்த 3 நாற்றுகளை மட்டும் விட்டு மற்ற நாற்றுகளை பிடுங்கி விட வேண்டும்.

உரமிடுதல்: ஒரு ஹெக்டேருக்கு அடியுரமாக 20 முதல் 30 கிலோ தழைச்சத்து, 30 முதல் 50 கிலோ மணிச்சத்து, 30 முதல் 40 கிலோ சாம்பல் சத்தை இட வேண்டும். மேலுரமாக 20 முதல் 30 கிலோ தழைச்சத்தை பூ பூக்கும் பருவத்தில் இட வேண்டும்.

நீர் பாய்ச்சுதல்: விதை ஊன்றியவுடன் குடம் அல்லது பூவாளி வைத்து தண்ணீர் ஊற்ற வேண்டும். நன்கு வளர்ந்தவுடன் வாரம் ஒரு முறை வாய்க்கால் மூலமாக தண்ணீரைப் பாய்ச்ச வேண்டும்.

பின்செய் நேர்த்தி: புடலைக் கொடி வளர்ந்து படருவதற்கு இரும்புக் கம்பிகளை வைத்து பந்தல் போடுவது அவசியமாகும். விதை முளைத்து கொடி வரும்போது, கொடியை மூங்கில் குச்சியோ அல்லது மற்ற குச்சிகளை வைத்தோ ஊன்று கொடுத்து பந்தலில் படர விட வேண்டும்.

இரண்டு இலைப் பருவத்தில் எத்ரல் 250 பிபிஎம் என்ற வளர்ச்சி ஊக்கியை தெளித்தால் பெண் பூக்கள் அதிகளவில் உற்பத்தியாகும். இதே வளர்ச்சி ஊக்கியை ஒரு வாரத்துக்கு 3 முறை தெளிக்க வேண்டும்.

பயிர் பாதுகாப்பு: புடலையில் பூசணி வண்டின் தாக்குதல் அதிகளவில்

காணப்படும். இதைக் கட்டுப்படுத்த 2 கிராம் செவின் அல்லது கார்பரில் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பழ ஈயின் தாக்குதலைக் கட்டுப்படுத்த மாலத்தியான் 1 சதவீதம் தெளிக்க வேண்டும்.

அறுவடை: விதை ஊன்றிய 80 நாள்கள் கழித்து முதல் அறுவடை தொடங்கும். பின்னர் ஒரு வார இடை வெளியில் 6 முதல் 8 அறுவடை கிடைக்கும். மேற்கண்ட வழிமுறைகளில் பயிரிட்டால் ஒரு ஹெக்டேருக்கு 20 முதல் 25 டன் வரை புடலங்காய் மகசூலைப் பெறமுடியும் என தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**நாளை விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

இதுகுறித்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வே.க. சண்முகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்க உறுப்பினர்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டு, வேளாண்மை, அது தொடர்பான குறைகள் குறித்து மனுக்கள் அளிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**வேளாண்மை பல்கலைக் கழக மாணவர்கள் களப் பண**

திண்டுக்கல் மாவட்டம் சேவுகம்பட்டி கிராமத்தில், பெரியகுளம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக தோட்டக் கலை மற்றும் ஆராய்ச்சி

நிலையத்தில் இறுதியாண்டு படிக்கும் மாணவர்கள், விவசாயி முனியாண்டி தோட்டத்தில் புதன்கிழமை கள ஆய்வு செய்தனர்.

இதில் சுதாகர், பிரசாந்த், ராஜ்குமார், ராஜ்கணேஷ், சங்கர், சிவபிரகாஷ், சுரேஷ்,விஜயக்குமார், நவீன்குமார் உள்ளிட்ட மாணவர்கள் கலந்து கொண்டு விவசாய நிலங்களில் களப்பணி செய்தனர்.

மேலும் அவரது தோட்டத்தில் சொட்டுநீர் பாசன முறை, அதன் பராமரிப்பு பற்றி தெரிந்து கொண்டனர். வத்தலகுண்டு தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் காயத்ரி மாணவர்களுக்கு விவசாய வழிமுறைகளை எடுத்துக் கூறினார்.

**வேளாண்மை துறை பணிகள்: ஆட்சியர் ஆய்வு**

சாத்தூர் அருகே வேளாண்மைத் துறை பணிகளை மாவட்ட ஆட்சியர் புதன்கிழமை ஆய்வு செய்தார்.

சாத்தூர் அருகே அணைக்கரைபட்டி கிராமத்தில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் அமைக்கபட்ட ஒருங்கிணைந்த பண்ணையத்தில் பண்ணைக்குட்டை அமைப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு பணிகளை மாவட்ட ஆட்சியர் ராஜாராமன் புதன்கிழமை ஆய்வு செய்தார். பின்னர் நத்தத்துபட்டி கிராமத்தில் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் விவசாயிகள் குழுவிற்கு தமிழ்நாடு அரசின் 100சதவீத மானியத்தில் வழங்கப்பட்ட சிறுதானியங்கள், இயந்திரங்கள், அரவை நிலையத்தை ஆய்வு செய்தார். ஆய்வின் போது விருதுநகர் வேளாண்மை இணை இயக்குநர் கனகராசன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) செல்வம், சாத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் சக்கரவர்த்தி, மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**உடுமலைக் கோட்டத்தில் நாளை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

உடுமலை வருவாய்க் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 21) நடைபெற உள்ளது.

இதுகுறித்து, வருவாய்க் கோட்டாட்சியர் அ.சாதனைக்குறள் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

உடுமலை வருவாய்க் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஆகஸ்ட 21-ஆம் தேதி காலை 11 மணி அளவில் உடுமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அனைத்துத் துறை அதிகாரிகளும் பங்கேற்கும் இக் கூட்டத்தில் உடுமலை மற்றும் மடத்துக்குளம் வட்டாரப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவித்து தீர்வு காணலாம்.

**பல்லடம் பகுதியில் வெண்டைக்காய் விலை வீழ்ச்சி**

பல்லடம், பொங்கலூர் பகுதியில் வெண்டைக்காய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

வெண்டைக்காய் நடவு செய்த 45 நாள்களில் காய்ப்புக்கு வந்து விடும். தண்ணீர் வளம் குறைவாக உள்ள பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் வெண்டைக்காய் உள்ளிட்ட காய்கறிகள் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2 மாதங்களாக ஒரு கிலோ வெண்டைக்காய் ரூ. 30-க்கு விற்பனையானது. இதன் காரணமாக விவசாயிகள் அதிகளவில் வெண்டைக்காய் சாகுபடி செய்தனர். தற்போது வெண்டைக்காய்

அறுவடையை அடுத்து, சந்தைக்கு வெண்டைக்காய் வரத்து அதிகரித்துள்ளது. இதனால், அதன் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

தற்போது, சில்லரை விற்பனை நிலையங்களில் வெண்டைக்காய் கிலோ ரூ. 10-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால், மொத்த வியாபாரிகள் கேட்கும் விலைக்கு வெண்டைக்காயை கொடுக்க வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

**எழுமாத்தூர் விற்பனை கூடத்தில் ரூ. 26 லட்சத்துக்கு வர்த்தகம்**

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 26 லட்சத்துக்கு தேங்காய், கொப்பரை வர்த்தகம் புதன்கிழமை நடைபெற்றது.

எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 711 மூட்டைகளில் 27 ஆயிரத்து 19 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 80.65-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 74.15-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 74.15-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 57.65-க்கும் என மொத்தம் ரூ. 20 லட்சத்து 14 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

அதேபோல, 27 டன் எடையுள்ள 70 ஆயிரத்து 700 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில், அதிகபட்சமாக டன் ரூ. 25 ஆயிரத்து 578-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 18 ஆயிரத்து 410-க்கும் என மொத்தம் 6 லட்சத்து 7 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

இதில், மொத்தம் ரூ. 26 லட்சத்து 21 ஆயிரத்துக்கு கொள்முதல் நடைபெற்றது.

**வேளாண் வளர்ச்சிப் பணிகள்: ஆட்சியர் ஆய்வு**

ராஜாக்கமங்கலம் ஒன்றியத்தில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை ஆகியவற்றின் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண் புதன்கிழமை ஆய்வு செய்தார்.

ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், இருளப்பபுரம் ஊராட்சி பகுதியில் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின்கீழ் மொசைக் கூட்டுசெடி மூலம் பட்டுப்புழு வளர்க்கப்படும் பணிகளை ஆட்சியர் பார்வையிட்டார்.

மேலகிருஷ்ணன்புதூரில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ. 2 லட்சம் மானியத்துடன் தென்னை நார் மதிப்பு கூட்டுதல் தொழிற்சாலையை அவர் ஆய்வு செய்தார். அட்மா திட்டத்தின்கீழ் வேளாண்மை விற்பனைத் துறையால் ஈத்தாமொழி பூமிபாதுகாப்புச் சங்கத்தில் நடத்தப்படும் விவசாயிகளுக்கான தேங்காய் மதிப்பு கூட்டுதல் செயல்விளக்க பயிற்சியில் ஆட்சியர் பங்கேற்றார். மேலும், புதூர் பகுதியில் நீடித்த, நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின்கீழ் வேளாண்மைத்துறையால் கனகசபை என்ற விவசாயியின் நிலத்தில் ரூ.50,000 மானியத்தில் அமைக்கப்பட்டுள்ள மண்புழு உர தயாரிப்புக் கூடத்தையும், தம்மத்துகோணத்தில் தோட்டக்கலைத் துறையால் தனபால் என்ற விவசாயியின் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மிளகு பரப்பு விரிவாக்கம், பல அடுக்கு சாகுபடி ஒருங்கிணைந்த பண்ணை ஆகியவற்றையும் பார்வையிட்டு ஆட்சியர் ஆய்வு செய்தார். ஆய்வின்போது, வேளாண்மை இணை இயக்குநர் பி.இளங்கோ, வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்)

வி.சந்திரசேனன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நிஜாமுதீன், வேளாண்மை துணை இயக்குநர்கள் பி.ஆனந்தராஜா, பி. சிவக்குமார், வேளாண்மை உதவி இயக்குநர் எம்.ஆர்.வாணி, தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் அசோக் மேக்ரின், டி.சி. கண்ணன் உடனிருந்தனர்

**இயற்கை முறையில் வீட்டுத்தோட்டம்: விவசாயிகளுக்குப் பயிற்சி**

சிதம்பரம் அருகே உள்ள பங்கிப்பேட்டை வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் இயற்கை முறையில் வீட்டுத் தோட்டம் அமைப்பது குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குநர் சு.ரமேஷ் முன்னிலை வகித்தார். வட்டார விவசாய ஆலோசனைக் குழுத் தலைவர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். அட்மா திட்ட துணை இயக்குநர் க.இளங்கோ பயிற்சியை தொடங்கி வைத்து, இயற்கை முறையில் காய்கறித் தோட்டம் அமைக்க வேண்டியதன் அவசியம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும் அவர் இயற்கை முறை சாகுபடி பற்றிய பயிற்சிக் கையேட்டினை வெளியிட்டார்.

வேளாண் அலுவலர் தி.அமுதா, இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளின் விற்பனைக்கு உள்ள சந்தை வாய்ப்புகள் குறித்து விளக்கினார். இந்திய பாரம்பரிய அறிவியல் நிலைய இயக்குநர் சுபாஷின், காய்கறி தோட்ட அமைப்பு, இயற்கை முறையில் காய்கறி பயிர்களை பயிரிடுதலும், பராமரித்தலும், இயற்கை முறையில் இடுபொருள்கள் தயாரிப்பு, மண்புழு உரம் தயாரிக்கும் முறைகள்,

மாடித்தோட்டம், தொட்டித்தோட்டம் அமைக்கும் முறைகள் குறித்துப் பயிற்சி அளித்தார்.

முகாமில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புல தோட்டக்கலைத்துறை பேராசிரியர் கருப்பையா, இந்திய பாரம்பரிய அறிவியல் நிலையம் பிரபு, தோட்டக்கலைத்துறை வேளாண் அலுவலர் பாலகுரு உள்ளிட்டோர் பயிற்சி அளித்தனர்.

ஏற்பாடுகளை அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் ஆனந்தசெல்வி, உதவி தொழில்நுட்ப மேலாளர் பழனிவாசன், மனோஜ் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஆக.21ல்) நடைபெறுகிறது.

இதுகுறித்து ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:செம்மண்டலத்தில் உள்ள புதிய மாவட்ட ஆட்சியரக தரைத்தளத்தில் அறை எண் 115ல் உள்ள பொதுமக்கள் குறைதீர்வு அரங்கில் காலை 10.30 மணிக்கு இக்கூட்டம் நடக்கிறது.

இதில் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது வேளாண்மை சார்ந்த குறைகளை கோரிக்கைகளாக வைக்க வாய்ப்பு வழங்கப்படும்.

கூட்ட அரங்கில் தங்களது கோரிக்கையை தெரிவிக்க விரும்பும் விவசாயிகள், காலை 10.30 மணிக்குள் தங்களது பெயர் மற்றும் கோரிக்கை வைக்கவுள்ள துறையின் பெயர் ஆகியவற்றை பதிவு செய்துகொள்ள வேண்டும். கோரிக்கைகளை மனுவாகவும் அளிக்கலாம்.

இக்குறைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் உயர் அலுவலர்கள் உரிய பதில் அளிப்பார்கள் என்று ஆட்சியர் அதில் தெரிவித்துள்ளார்.

**"திருந்திய நெல் சாகுபடி போட்டி: ரூ.5 லட்சம் பரிசு'**

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டியில் பங்கேற்று ரூ.5 லட்சம் பரிசு பெறலாம் என, வேளாண்மை இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் கூறியது: திருந்திய நெல் சாகுபடியில் மாநில அளவில் அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு முதலிடம் பெறுவோர் தேர்வு செய்யப்படுவர். போட்டியில் பங்கேற்க விரும்புவோர் அதற்கான விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து, பதிவுக் கட்டணமாக ரூ. 150 செலுத்த வேண்டும். விண்ணப்பங்களை அந்தந்தப் பகுதி வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவுசெய்து கட்டண ரசீது பெறலாம். பதிவுக் கட்டணம் திருப்பி வழங்கப்படமாட்டாது.

போட்டியில் பங்கேற்கும் விவசாயிகள் தங்களது அறுவடை தேதியை 15 நாள்களுக்கு முன்பே வட்டார வேளாண் உதவி இயக்குநர்களுக்கு நேரிலோ, பதிவு தபால் மூலமோ தெரிவிக்க வேண்டும். போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்ட நிலம், வேளாண்மை உதவி இயக்குநரால் பார்வையிடப்படும். நிலத்தின் மகசூல் ஏக்கருக்கு 2,500 கிலோவுக்கு குறைவாக இருந்தால் தள்ளுபடி செய்யப்படும்.

இவ்வகையில் தேர்வு செய்யப்படும் வயலின் அறுவடையை 4 பேர் கொண்ட குழு மேற்பார்வையிடும். போட்டியின்போது குறைந்தபட்சம் 50 சென்ட் நிலப்பகுதியில் அறுவடை செய்து அவற்றை ஹெக்டேருக்கு மாற்றம் செய்து கணக்கிடப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பெறப்படும் மகசூலை ஒப்பிட்டு மாநில அளவிலான தேர்வுக்கு ஒருவர் தேர்வு செய்யப்பட்டு ரூ.5 லட்சம் பரிசு வழங்கப்படும். இந்த நிதியாண்டில் தேர்வு செய்யப்படும் நபருக்கு அடுத்த குடியரசு தின விழாவில் பரிசு வழங்கப்படும் என்றார் அவர்.

**இயந்திர முறையில் நெல் நடவுப் பயிற்சி**

உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில், புதுக்கோட்டை அருகே கூவாட்டுப்பட்டியில் விவசாயிகளுக்கு இயந்திர முறையில் நெல் நடவுப் பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

பயிற்சியை வேளாண் துணை இயக்குநர் வ. சாந்தி தொடக்கி வைத்து உழவர் பயிற்சி நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும், பயிற்சியில் கற்ற தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து மிகுந்த மகசூல் பெறுவதுடன் அதை மற்ற விவசாயிகளுக்கும் கற்றுத் தர வேண்டும் என்றார்.

வம்பன் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் தனலெட்சுமி பேசுகையில், தோட்டக்கலைப் பயிர்களில் நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நிலம், நீர், உரப் பயன்பாட்டில் குறைந்த செலவில் மிகுந்த மகசூல் பெறும் வழிவகைகளை எடுத்துக் கூறினார். குறைந்த நீரைப் பயன்படுத்திச் சாகுபடி செய்யக்கூடிய காய்கறிகள், மலர்கள் பற்றிய சாகுபடித் தொழில் நுட்பங்களை விளக்கினார்.

அன்னவாசல் வேளாண் உதவி இயக்குநர் சிங்காரம் பேசுகையில், இயந்திரம் நெல் நாற்றங்கால் விடுதல், நடவு முறை குறித்தும் அவற்றுக்கான மானியமாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 3,000 வழங்கப்படுவது குறித்தும், நடப்பாண்டில் நெல் சாகுபடி செய்யும்

விவசாயிகள் அனைவரும் இயந்திர முறையில் நெல் நடவு செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தினார். மேலும், மானியம் பெறுதலுக்கு விவசாயிகள் தங்களுடைய குடும்ப அட்டை, கணினிச் சிட்டா, வரைப்படம், வங்கிக் கணக்குப் புத்தக நகல், புகைப்படம் ஆகியவற்றை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் வழங்கி முன்னுரிமைப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனவும், உளுந்துச் சாகுபடியில் மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்ட வம்பன்-5, வம்பன்-6 ரகங்களைப் பயிரிடவும் உளுந்து விதைகளை முளைகட்டி விதைத்தலால் பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்படுவது குறித்தும் தெரிவித்தார்.

தோட்டக்கலைத் துறை உதவி வேளாண் அலுவலர் தேவராஜ் பேசுகையில், தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்களான புதிய தோட்டங்கள் அமைத்தல், பசுமைக்குடில் அமைத்தல், நிழல்வலைக் கூடாரம் அமைத்தல், சொட்டுநீர்ப் பாசனம் அமைத்தல், வீரிய ஒட்டு இரகக் காய்கறி விதையுற்பத்தி குறித்தும் விளக்கிப் பேசினார்.

நிறைவாக உழவர் மன்ற அமைப்பாளர் கூவாட்டுப்பட்டி முருகேசன் நன்றி கூறினார்.

**1500 டன் சன்ன ரகஅரிசி கோவைக்கு அனுப்பிவைப்பு**

நீடாமங்கலம் ரயில் நிலையத்திலிருந்து 1500 டன் சன்ன ரக அரிசி பொது விநியோகத் திட்டத்திற்காக கோவை புதன்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை ஆகியவற்றிலிருந்து 116 லாரிகளில் 1500 டன் சன்ன ரக அரிசி நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு புதன்கிழமை கொண்டு வரப்பட்டது. இந்த அரிசி மூட்டைகள் சரக்கு ரயிலில் ஏற்றப்பட்டு கோவைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

**நாளை விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை (ஆக.21) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்திக்குறிப்பு: நடப்பு மாதத்துக்கான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 21ஆம் தேதி ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. காலை 10.30 மணிக்கு நடக்கும் இக் கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் தொடர்பான பல்வேறு தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், விவசாயம் தொடர்பான குறைகள் ஏதாவது இருந்தால், அவற்றை தெரிவித்து உரிய நிவாரணம் பெறலாம். பட்டா மாறுதல், பாதை தகராறு உள்ளிட்ட அனைத்து நிலங்கள் தொடர்பான பிரச்னைகளுக்கு, வியாழக்கிழமை (ஆக.20)காலை, 10.30 மணிக்கு, மாவட்ட வருவாய் அலுவலர் வே.ரா.சுப்புலட்சுமி தலைமையில், ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடக்கும் கூட்டத்தில், நிலம் தொடர்பான பிரச்னையைத் தெரிவித்து பயன் பெறலாம்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 12 ஆயிரம் கன அடியாக அதிகரிப்பு**

காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து புதன்கிழமை காலை நொடிக்கு 12 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த ஒருவார காலமாக மழை பெய்து வருகிறது. இதனால், கடந்த சனிக்கிழமை முதல் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதையடுத்து, புதன்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 12,280 கன அடியாக அதிகரித்தது. இதனால், அணையின் நீர்மட்டம் சரிவிலிருந்து மீண்டது. இதையடுத்து, அணையின் நீர்மட்டம் 91.13 அடியாக இருந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 13 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 53.95 டி.எம்.சி.யாக இருந்தது.

கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு: அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதால், மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்கு வியாழக்கிழமை (ஆக.20) முதல் தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனம் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1-ஆம் தேதி கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். நிகழாண்டில் ஆகஸ்ட் 1-ஆம் தேதி அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால், கால்வாய் பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை. தற்போது, நீர்வரத்து அதிகரித்திருப்பதால் 19 நாள்கள் தாமதமாக

மேட்டூர் அணையிலிருந்து கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

**காபி, ரப்பர் உற்பத்தியில் அன்னிய நேரடி முதலீடு இல்லை : அரசு தகவல்**




புதுடெல்லி : தேயிலை பயிரிடும் துறையில் அரசு ஒப்புதல் முறையில் தற்போது 100 சதவிகித அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டு வருகிறது. எனினும் மற்ற துறைகளில் அவ்வாறு அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையில் இந்திய - சீன வர்த்தகம் தொடர்பான இந்திய தொழில் கூட்டமைப்பு மாநாட்டில் ே◌◌பசிய மத்திய அரசின் டிஐபிபி செயலர் அமிதாப் காந்த், காபி மற்றும் ரப்பர் பயிரிடுவதில் அன்னிய நேரடி முதலீடு பற்றி யூகத்தின் அடிப்படையான செய்திகள் உலா வருவதாகவும் ஆனால், அதில் உண்மை இல்லை என்றும் கூறினார்.

இந்தியாவின் நடப்பு பயிர் ஆண்டு காபி உற்பத்தி 3.31 லட்சம் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா 803 மில்லியன் டாலர் மதிப்பிலான காபியை ஏற்றுமதி செய்கிறது. சீனாவில் இருந்து இந்தியாவில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளின் அளவு 1.12 பில்லியன் டாலராக உள்ளது. இது மொத்த அன்னிய நேரடி முதலீட்டில் 0.44 சதவிகிதம் தான் என்றும் காந்த் தெரிவித்தார். இந்தியாவில் சீனா அதிகளவில் முதலீடு செய்வதற்கு தேவையான அனைத்து ஆதரவுகளும் அளிக்கப்படும் என்றார்.

**தேயிலை தூள் விலை சரிவு**




குன்னூர் : குன்னூர் டீ டிரேடர்ஸ் அசோசியேசன் (சிடிடிஏ) தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 33வது ஏலம் நடந்தது. இதில் மொத்தம் 17.43 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 12.80 லட்சமும். டஸ்ட் ரகம் 4.63 லட்சமும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்கேற்று தரமான தேயிலை தூளை மட்டுமே கொள்முதல் செய்ததால் 74 சதவீத தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டது.

தேயிலை தூளுக்கு தேவை குறைந்து இருந்ததால் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.1 வரை விலை குறைந்தது. சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக ரூ.203, ஆர்த்தோடெக்ஸ் ரகத்திற்கு ரூ.255 விலை வழங்கப்பட்டது. அடுத்த ஏலம் வரும் வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் நடக்கிறது. இதில் 16.18 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

வயல்வெளி பள்ளியின் விளைவுகள் வேளாண்துறை அட்வைஸ்

பழநி, : விவசாயி வயல்வெளி பள்ளியின் மூலம் தனது வயலில் பூச்சி, நோயினை எதிர்த்து, சுற்றுச்சூழலை அனுசரித்து நன்கு வளர்ந்து நல்ல மகசூலைக் கொடுக்கக் கூடிய ரகத்தை தேர்ந்தெடுக்கும் திறனை வளர்த்துக் கொள்ளலாம். நட்டவுடன் பச்சை பிடிக்கும் வளமான நாற்றுகளை தயாரிக்க கற்றுக் கொள்ளலாம். தனது வயலில் மண் தன்மையிலேயே இயற்கை உரங்களையும், ரசாயன உரங்களையும், உயிர் உரங்களையும் சரியான விகிதத்தில் சேர்த்து, சரியான தருணத்தில் இட்டு, அதிக மகசூல் எடுக்க தெரிந்து கொள்ளலாம். பயிர் வளர்ச்சியில் பல முக்கிய பருவங்களைக் கண்டறிந்து அந்த பருவங்களில் செய்ய வேண்டிய செய்நேர்த்திகளை செய்ய அறிந்து கொள்ளலாம்.

பயிர் வளர்ச்சியில் எந்தெந்த பருவத்தில் களைகள் இருக்கக்கூடாது என தெரிந்து களைகளைக் கட்டுப்படுத்த தெரிந்து கொள்ளலாம். பயிரின் எந்த பருவத்திற்கு நீர்த்தேவை, எந்த பருவத்தில் நீர் தேவையில்லை என்பதை அறிந்து, அதன்படி நீர் மேலாண்மை செய்ய தெரிந்து கொள்ளலாம். தரமான மற்றும் அதிக மகசூலுக்கு சரியான தருணத்தில் அறுவடை செய்ய கற்றுக்கொள்ளலாம். விவசாயிகள் இதுதொடர்பாக கூடுதல் விவரங்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ, பழநியில் உள்ள வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாமென பழநி வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**குரும்பூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம்**

தூத்துக்குடி, : தூத்துக் குடி கலெக்டர் ரவிகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருச்செந்தூர் வட்டத்தில் குரும்பூர் மற்றும் அதன் சுற்று

வட்டாரங்களில் முன்கார் நெல் அறுவடை நடக்கிறது. விவசாயிகள் சாகுபடி செய்த நெல்லிற்கு உரிய விலை கிடைத்திட ஏதுவாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் குரும்பூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அரசு உத்தரவுபடி கிரேடு ஏ ரக நெல்லினை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1470க்கும் மற்ற ரக நெல்லினை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1410க்கும் கொள்முதல் செய்யப்படும். நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் குரும்பூர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை பயன்படுத்தி பயன் பெறலாம்.

**நிலத்தடி நீர்மட்டம் துல்லியமாக ஒரு மாதத்துக்கு பிறகு கூடியது மாட்டுச்சந்தை**

திருப்பூர், : ஒரு மாதத்திற்கு பிறகு திருப்பூரில் நேற்று மாட்டு சந்தை கூடியது. விற்பனையும் அமோகமாக இருந்ததாக வியாபாரிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். தமிழகத்தில் பொள்ளாச்சி, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட பல இடங்களில் மிகப்பெரிய அளவில் மாட்டுச்சந்தை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் பல்வேறு சமூக நல அமைப்புகள் அதிக அளவில் மாடுகளை வாகனங்களில் ஏற்றிச் செல்லவதை தடுத்து, அதிலிருந்த மாடுகளை பறிமுதல் செய்து கோசாலைகளில் அடைத்து வைத்தனர்.

இதனால், பாதிக்கப்பட்ட வியாபாரிகள் மாடுகளை விடுவிக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஒரு மாதமாக மாடுகளை வாங்காமல் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இதனால் மாட்டுச்சந்தைகள் நடைபெறவில்லை. விதிகள் தளர்த்தப்பட்டதால் தற்போது மாட்டுச்சந்தைகள் மீண்டும் களை கட்டத்துவங்கியுள்ளன. திருப்பூரில் நேற்று நடைபெற்ற

மாட்டுச்சந்தைக்கு திருவண்ணாமலை, வெள்ளகோவில், காங்கயம், மூலனூர் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து 1000க்கும் மேற்பட்ட மாடுகள், கன்றுகள், எருமைகள் விற்பனைக்கு வந்திருந்தது. இதில் கன்றுகள் மற்றும் எருமைகள் அதிக அளவில் விற்பனையானது.

இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது: இந்த வாரம் விற்பனைக்கு கொண்டு வந்த 1 மாத கன்றுகள் ரூ.5 ஆயிரத்துக்கும், 4 மற்றும் 6 மாத கன்றுகள் ரூ.10 ஆயிரம் வரையிலும் விற்பனையானது. ஒரு எருமை ரூ.20 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டது. மொத்தத்தில் விற்பனை நன்றாக இருந்தது. இவ்வாறு வியாபாரிகள் தெரிவித்தனர்.பார்த்து அசத்துகிறார்நவீன கருவிகள் ஏதுமின்றி சாவி கொத்து, தேங்காய் மூலம் நிலத்தடி நீர்மட்டம் துல்லியமாக பார்க்கும் சென்னிமலை குருஜி எஸ்.கே.ராஜா, வறட்சியின் சிக்கிதவிக்கும் விவசாயிக உற்ற துணையாக உள்ளார். சென்னிமலை அருகே செலமகவுண்டம்பாளையத்தை சேர்ந்த இவர் இது வரை 5000க்கும் மேல் நீர்மட்டம் பார்த்து போர்வெல் அமைத்ததில் தண்ணீர் கிடைத்துள்ளது. இவரின் புகழ் நாளுக்கு நாள் விவசாயிகளின் மத்தியில் பெருகி வருகிறது.

கடந்த 19 ஆண்டுகளுக்கு முன்பு ராஜாவுக்கு இந்த திறமை உள்ளதை யாரும் நம்ம மறுத்தனர். ஆனால் தனது உறவினர் ஒருவரின் தோட்டத்தில் ராஜா சொன்னதை வைத்து போர்வெல் போட்டார். அதில் அதிக அளவில் தண்ணீர் வந்தது. அது முதல் ராஜாவின் புகழ் பரவ ஆரம்பித்தது தற்போது தினமும் அவரை அழைத்து நீர் மட்டம் பார்க்கும் குருஜி எஸ்.கே.ராஜா சிறந்த நீர் உற்று நிபுணராக விளங்குகிறார். புதிய வீடு கட்டுவதற்கு முன்பு முதலில் போர்வெல் அமைக்க இவரைத் தான் அழைக்கிறார்கள். தமிழ்நாடு மட்டும் இன்றி பக்கத்து மாநிலங்களை

சேர்ந்தவர்களும் இவரை அழைத்து செல்கிறார்கள். இவருக்கு கிடைத்துள்ள வரம் தெய்வ வரம் என்றும் அதீத சக்தி என்றும் பாராட்டுகிறார்கள்.

**விவசாயிகள், மாணவிகளுக்கு உயிர் உரங்கள் தயாரிப்பு பயிற்சி**

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் ஊரக வேளாண்மை வளர்ச்சி வங்கி சார்பில் உயிர் உரங்கள் உற்பத்தி தொடர்பான 3 நாள் பயிற்சி வகுப்பு நடந்தது. திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி ஆராய்ச்சி நிலைய பயிர்பாதுகாப்பு துறை பேராசிரியர் சோழன் தலைமை வகித்தார். நீடாமங்கலம் அறிவியல் நிலைய தலைவர் பாஸ்கரன் வரவேற்றார். அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மாணவிகள் 12 பேர், நபார்டு குழுவை சேர்ந்த 30 விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். சோழன் பேசுகையி, வேளாண்மைக்கு உறுதுணை புரியும் உயிர் உரங்களையும், உயிரியல் நோய்க்கொல்லி மருந்துகளான சூடோமோனாஸ், டிரைக்கோடெர்மா விரிடி போன்றவற்றை பயன்படுத்துவதால் மண்வளம் கெடாமல் சுற்றுச்சூழல் மாசுபடாமல் நஞ்சில்லா தானியங்களை உற்பத்தி செய்ய முடியும் என்னறார். நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் ரவிசங்கர், உதவிபேராசிரியர்கள் சிவக்குமார், ராஜாரமேஷ், கவிதாஸ்ரீ, சரவணன் ஆகியோர் உயிர் உரங்கள் உற்பத்தி மற்றும் பயன்கள் பற்றி பயிற்சி அளித்தனர். பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கப் பட்டது. உதவி பேரசிரியர் காமராஜ் நன்றி கூறினார்.

**திருவாரூரில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருவாரூர், : திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் இன்று (20ம் தேதி) காலை 10.30 மணியளவில் நடைபெறுகிறது. இதில் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் மற்றும் விவசாய சங்கத்தினர் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவித்து பயன்பெறுமாறு மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வீட்டு தோட்டம் அமைக்க பயிற்சி**

புவனகிரி, :பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் அட்மா திட்டத்தின்கீழ் இயற்கை முறையில் வீட்டு தோட்டம் அமைப்பது பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வட்டார விவசாய ஆலோசனை குழு தலைவர் சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் ரமேஷ் முன்னிலை வகித்தார். வேளாண்மை துணை இயக்குனர் இளங்கோ பயிற்சியை துவக்கி வைத்தார்.வேளாண்மை அலுவலர் அமுதா, விற்பனைக்கு உள்ள சந்தை வாய்ப்புகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். இந்திய பாரம்பரிய அறிவியல் நிலைய இயக்குநர் சுபாஷினி காய்கறி தோட்ட அமைப்பு, அதை பராமரித்தல் குறித்து விளக்கம் அளித்தார். அண்ணாமலை பல்கலைக்கழக தோட்டக் கலைத்துறை பேராசிரியர் கருப்பையா, இந்திய பாரம்பரிய அறிவியல் நிலைய அலுவலர் பிரபு, தோட்டக்கலைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் பாலகுரு, அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஆனந்தசெல்வி, உதவி தொழில்நுட்ப மேலாளர் பழனிவாசன், மனோஜ் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இந்த பயிற்சியில் பங்கேற்ற அனைத்து விவசாயிகளுக்கும் அங்கக முறையில் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறி விதைகள், மண்புழு

உரம், இயற்கை முறை சாகுபடி பற்றிய பயிற்சி கையேடு உள்ளிட்டவை வழங்கப்பட்டது.

**நேரடி நெல் வரிசை விதைப்புக்கு மானியம் விவசாயிகள் பதிவு செய்ய வேண்டுகோள்**

ராமநாதபுரம், : ஆர்.எஸ்.மங்கலம் வட்டாரத்தில் நேரடி நெல் வரிசை விதைப்புக்கு மானியம் பெற விவசாயிகள் பதிவு செய்து கொள்ளலாம் என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். ஆர்.எஸ்.மங்கலம் வட்டாரத்தில் 19 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மானாவரியில் நேரடி விதைப்பாக நெல் விதைக்கப்படுகிறது. மழையை எதிர்நோக்கி விதைக்கும் பொழுது விவசாயிகள் ஏக்கருக்கு 30 கிலோ நெல் விதை பயன்படுத்துகின்றனர். நடப்பாண்டில் ஆர்.எஸ்.மங்கலம் வட்டாரத்தில் 7 ஆயிரத்து 200 ஹெக்டேர் வரை நேரடி நெல் வரிசை விதைப்பு தொழில்நுட்பத்தில் விதைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பத்து ஆண்டுகளுக்கு உட்பட்ட நெல் ரகங்களை (குறிப்பாக என்.எல்.ஆர். 34449 மற்றும் அண்ணா-4 ரகங்கள்) பயன்படுத்தி விதைக்கும் கருவி கொண்டு வரிசை விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு இத்திட்டத்தில் மானியம் வழங்கப்படுகிறது.

நெல் வரிசை விதைப்பிற்கு ஏக்கருக்கு 16 முதல் 20 கிலோ போதுமானது. நெல் வரிசை விதைப்பில் முளைப்பு சீராக இருக்கும். பயிர் இடைவெளி நன்கு பராமரிக்கப்படுவதால் காற்றோட்டம் மற்றும் சூரிய வெளிச்சத்தால் நன்றாக அடிப்பகுதி வெடித்து மகசூல் அதிகம் கிடைக்கும். பூச்சி நோய் தாக்குதலும் குறைவாக இருக்கும்.

விதைப்பிற்கு முன்பு விதை நெல்லை ஒரு சதவீதம் பொட்டாஷ் கரைசலில் விதை நேர்த்தி செய்தால், விதைக்கும் பொழுது நல்ல முளைப்புத்திறன் மற்றும் ஆரம்ப கால வளர்ச்சியை தாங்கி வளரும். நேரடி நெல் வரிசை விதைப்புக்கு ஹெக்டேருக்கு வழங்கும் ரூ.5 ஆயிரம் மானியத்தில் வேளாண்மை விரிவாக்க மையத்தில் பெறும் விதை நெல், நுண்ணூட்டம் மற்றும் திரவ உயிர் உரம் ஆகியவற்றிற்கான மானியம் கழிக்கப்பட்டு மீதத்தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். இந்த செயல் விளக்கம் 100 ஹெக்டேரில் தனித்தனி தொகுதியாக செயல்படுத்தப்படும் என்பதால் ஒரு விவசாயி அதிகபட்சம் 2 ஹெக்டேர் அளவில் பயன்பெறலாம்.

இத்திட்டத்தில் சேர விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களிடம் தங்கள் நில உடமை ஆவணங்கள் மற்றும் வங்கிக் கணக்கு புத்தக நகல் ஆகியவற்றை கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண்டும். தற்போது ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் ஆனந்தூர் வேளாண்மை விரிவாக்க மையங்களில் விதை நெல், உயிர் உரம், நுண்ணூட்டம் மற்றும் உயிர் பாதுகாப்பு மருந்துகள் இருப்பில் உள்ளன. விவசாயிகள் இடுபொருள் தேவை மற்றும் திட்டங்கள் பற்றிய விபரங்களுக்கு வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி பெற்றுக் கொள்ளலாம். மேலும் தகவல்களுக்கு 04561-251265, 95669 43421 என்ற எண்களுக்கு தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என உதவி இயக்குநர்(பொ) உலகுசுந்தரம் தெரிவித்துள்ளார்.

**பாவூர்சத்திரம் மார்க்கெட்டில் பல்லாரி விலை உயர்வு, வெங்காயம் விலை சரிவு விவசாயிகளுக்கு லாபமில்லை**

பாவூர்சத்திரம் : பாவூர்சத்திரம் மார்க்கெட்டிற்கு பல்லாரி வரத்து குறைவால் விலை அதிகரித்தும், சிறு வெங்காயம் வரத்து அதிகரிப்பால் விலை குறைந்தும் காணப்பட்டது. இந்த விலை ஏற்றம், இறக்கம் விவசாயிகளை கவலையடைய செய்துள்ளது. நெல்லை மாவட்டம், கீழப்பாவூர், மேலப்பாவூர், சுந்தரபாண்டியபுரம், பெத்தநாடார்பட்டி, செல்லதாயார்புரம், மகிழ்வண்ணநாதபுரம், அடைக்கலப்பட்டணம், ஆவுடையானூர், சாலைப்புதூர், அரியப்புரம், நாட்டார்பட்டி, திப்பணம்பட்டி போன்ற ஊர்களில் பல்லாரி வெங்காயம் பயிரிட்டு தற்போது அறுவடை செய்து வருகின்றனர். இவற்றை பாவூர்சத்திரம் காமராஜர் தினசரி மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

வழக்கமாக கடந்த ஏப்ரல் மாதம் பல்லாரி நாற்று பாவி அதை 30 மற்றும் 45 நாட்களுக்குள் பிடுங்கி வயல்களில் நடவேண்டும். ஆனால், கடந்த ஏப்ரல் மாதம் பெய்த கோடை மழையால் 45 நாட்களில் எடுக்க வேண்டிய நாற்றை 15 நாட்கள் தள்ளி எடுத்தனர். மேலும் நாற்று நடும் வேளையில் தொடர் மழை பெய்ததால் நடுவைக்கு ஏற்றார் போல் நிலத்தை பக்குவப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், நாற்று முற்றி வேரில் பூஞ்சான் நோய் தாக்கி சரியான முறையில் விளைச்சல் இல்லை. பாவூர்சத்திரம் மார்க்கெட்டிற்கு கடந்த வாரம் 500 முதல் 700 டன் வரை பல்லாரி விற்பனைக்கு வந்தது. இதனால் கிலோவுக்கு ரூ.20 முதல் 30 வரை விற்பனையானது. ஆனால் கடந்த 2 நாட்களாக மார்க்கெட்டிற்கு 200 முதல் 300 டன் வரைதான் விற்பனைக்கு வருகிறது.

உள்ளூர் மற்றும் வெளிமாநிலம், மாவட்டங்களுக்கு தேவை அதிகரிப்பால் விற்பனையில் ஏற்றம் ஏற்பட்டு பல்லாரி கிலோ ஒன்றுக்கு ரூ.40 முதல் 50 வரை விற்பனையானது. இதுகுறித்து விவசாயி களிடம் கேட்டபோது, ‘பல்லாரி கடந்த இரண்டு நாட்களாக நல்ல விலைக்கு விற்கப்படுகிறது. போதிய விளைச்சல் இருந்திருந்தால் எங்களுக்கும் கூடுதல் லாபம் கிடைத்திருக்கும். ஆனால் நோய் காரணமாக விளைச்சல் இல்லாததால் எங்களுக்கு லாபம் இல்லாமல் போய்விட்டது’ என்றனர். இதற்கிடையில், கடந்த வாரம் கிலோவுக்கு ரூ.20 முதல் 30 வரை விற்ற சிறு வெங்காயம் வரத்து அதிகரிப்பால் கிலோவுக்கு ரூ.15 முதல் 20 வரை விற்பனையானது. இந்த விலை சிறு வெங்காய விவசாயிகளையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

தின பூமி

**சென்னை, முதல்வர் ஜெயலலிதாவின் நடவடிக்கையால் நடப்புஆண்டில்(2015-2016) 10 லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ.5,500 கோடி பயிர்க்கடன் வழங்கதிட்டமிடப்பட்டுள்ளது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.**

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு :

விவசாயிகளுக்கான குறுகிய கால பயிர்க்கடன் வட்டி மானிய திட்டத்தை நடப்புநிதியாண்டில் 30.6.2015 வரை மட்டும் மத்திய அரசு நீட்டித்து மாற்று திட்டத்தைஆலோசித்து வந்த நிலையில், தமிழ்நாடு அரசு சார்பில் இது தொடர்பாக கடிதம் ஒன்று29.4.2015 அன்று அனுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து 20.6.2015 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா ,

பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில், விவசாயிகளுக்கான குறுகிய கால பயிர்க்கடன் வட்டி மானியத் திட்டத்தில், தற்போதுள்ள நடைமுறைகளின்படியே தொடரவேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தி எழுதியுள்ளார்கள். மத்திய அரசால்உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்ட இரண்டு மாற்றங்களும் பாதகமானவை என்றுஅந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தார்கள். முதலாவதாக, வங்கிகள், முன்னுரிமைபிரிவுகளுக்கு அடிப்படையான வட்டி விகிதத்தில் கடன் வழங்க அனுமதித்தல்,இரண்டாவதாக, பயனாளிகளுக்கு நேரடியாக மானியம் வழங்குதல், அதாவது விவசாயிகள்தாங்கள் பெற்ற கடனை முழுமையாக திரும்பச் செலுத்திய பின்னர், நேரடியாக மானியம்வழங்கும் முறை, தற்போதுள்ள நடைமுறையான வங்கிகளின் கடன் வழங்கும்தகுதிக்கேற்ப வட்டி மானியத்தினை வங்கிகளுக்கு வழங்கும் முறைக்கு மாறுபட்டதாகும்என தெரிவிக்கப்பட்டிருந்தது.

முதலமைச்சர் ஜெயலலிதா மேலும் தமது கடிதத்தில், எதிர்பாராத நிகழ்வுகளுக்குஉட்படும் வேளாண்மைப் பணிகளை மேற்கொள்ளும்போது, தற்போது வழங்கப்படும்கடன்களுக்கான வட்டி விகிதங்களை உயர்த்துவதோ, அல்லது விவசாயிகளுக்குஅளிக்கப்படும் சலுகைகளை குறைப்பதோ தேவையற்றதாகும் என குறிப்பிட்டுள்ளார்.மேலும், இச்சூழ்நிலைகளில் விவசாயிகள் அதிக வட்டியினை முதலில் செலுத்தி, பின்னர்அத்தொகையை, நேரடி மானியம் மூலம் பெறுவது என்பது விவசாயிகளை கடுமையாகப்பாதிக்கும் என்றும், தற்போது நடைமுறையில் உள்ளபடி, விவசாயிகளுக்கு வங்கி கணக்குமூலம் கடன் வழங்கப்படும்போதே, விவசாயிகள் வட்டி சலுகைகளைப் பெற்று வருகின்றனர். நேரடி மானியத் திட்டத்திற்கு மாறும்போது, கடனைத் திரும்பச்

செலுத்திய பின்னர்,மானியம் வழங்கப்படுவதால் விவசாயிகளுக்கு எவ்வித பலனும் இல்லாததுடன்,விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கடன் கிடைப்பதிலும், இலக்கினை அடைவதிலும்,பொறுப்புடைமையிலும் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது என்றும் அந்த கடிதத்தில்தெரிவித்திருந்தார்.முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் தமது கடிதத்தில், தமிழ்நாடு அரசு, கூட்டுறவுகள் மூலம்வழங்கப்படும் பயிர் கடன்களுக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து 4 சதவிகிதத்தொகையினை, ஊக்க வட்டி மானியமாக மத்திய அரசு வழங்கும் வட்டி மானியத்துடன்கூடுதலாக வழங்கி வருவதனையும் குறிப்பிட்டுள்ளார்கள். இதனால், தமிழ்நாட்டில் விவசாயப் பெருமக்கள், உரிய காலத்தில் கடனை செலுத்தும்போது, வட்டியின்றிபயிர்க்கடன் பெற்று பெரும்பயன் அடைகின்றனர். நம்நாட்டின் வேளாண் வளர்ச்சிக்குஉந்துதல் கொடுக்க வேண்டும் எனில், விவசாயிகளுக்கு தேவையான அளவு பயிர் கடன்கிடைக்கச் செய்வது அவசியம். எனவே, அடிப்படை நிலவரத்தை கருத்திற்கொள்ளாமல்,தற்போதுள்ள நடைமுறையினை மாற்றம் செய்வது, கடும் எதிர் விளைவுகளை உருவாக்கக்கூடும்.

எனவே, நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வரும் விவசாயிகளுக்கானஇத்திட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, பாரத பிரதமர் மோடி நேரடியாக தலையிட்டு, இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் குறித்து,தொடர்புடைய அனைவரிடமும் நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்தாலோசனைமேற்கொண்டு, விவசாயிகளுக்கு அதிக பயன் தரக்கூடிய வகையில் திட்டம்அமையவேண்டும் எனவும் தற்போது, நடைமுறையில் உள்ளவாறே குறுகிய கால பயிர் கடன்வட்டி மானியத் திட்டம் தொடர வேண்டும் எனவும் முதலமைச்சர்ஜெயலலிதா கேட்டுக்கொண்டிருந்தார்.

முதல்வர் ஜெயலலிதா கடிதத்திற்கு மத்திய நிதி அமைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு 3.8.2015 தேதியிட்ட பதில் கடிதத்தில், மத்திய அரசுதற்போதுள்ள வட்டி மானியத் திட்டத்தின்படி மார்ச் 2016 வரை குறுகிய கால பயிர்க்கடன்களுக்கு வட்டி மானியம் தொடர்ந்து வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். மேலும்,இது தொடர்பாக, மத்திய அரசின் வேளாண்மைத் துறையால் ஒரு குழு அமைக்க மத்தியஅமைச்சரவை முடிவு செய்துள்ளதாகவும், இக்குழு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குவழங்கப்படும் கடன்களை மேம்படுத்தவும், வட்டி மானியத் திட்டத்தின் நிதி ஆதாரங்களைஅதிக அளவில் பயன்படுத்தவும் பரிந்துரைக்கும் எனவும் தெரிவித்துள்ளார். இப்பொருள்தொடர்பாக மாநில அரசுகளுடன் கலந்தாலோசனை மேற்கொள்வதற்கான விவாதக்குறிப்புகளை நிதி ஆயோக் அமைப்பு தயாரித்து வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர்ஜெயலலிதா மேற்கொண்ட முயற்சியால் இந்தியா முழுவதுமுள்ளவிவசாயிகள், தடையில்லாத குறுகிய கால விவசாயக் கடன் பெற வழிவகை ஏற்பட்டுள்ளது.தமிழ்நாட்டில் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 2014-2015ஆம் நிதி ஆண்டில்10,36,859 விவசாயிகளுக்கு, ரூ.5,000 கோடி என நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட கூடுதலாக, ரூ.5,279.91கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் (2015-2016) 10 லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ.5,500 கோடி பயிர்க்கடன் வழங்கதிட்டமிடப்பட்டுள்ளது.

சூரியசக்தி மூலம் இயங்கும் கொச்சி விமான நிலையம்: உம்மன் சாண்டி திறந்து வைத்தார்

**யங்கும் கொச்சி விமான நிலையம்: உம்மன் சாண்டி திறந்து வைத்தார்**



கொச்சி: உலகிலேயே சூரிய சக்தியில் செயல்படும் முதல் விமான நிலையம் என்ற பெருமையை கேரள மாநிலம் கொச்சியில் உள்ள சர்வதேச விமான நிலையம் பெற்றுள்ளது. இதனை அம்மாநில முதல்வர் உம்மன்சாண்டி திறந்து வைத்தார். கொச்சி சர்வதேச விமான நிலையத்திற்கு ஒரு நாளைக்கு 50,000 முதல் 60,000 ஆயிரம் யூனிட்டுகள் வரை மின்சாரம் தேவைப்படுகிறது. இந்த மின்சாரத்தை சூரிய சக்தி மூலம் உற்பத்தி செய்ய முடிவு செய்த கொச்சி விமான நிலைய நிறுவனம் முதற்கட்டமாக கடந்த மார்ச் 2013-ல் 100 கிலோவாட் மின்சார உற்பத்தி திறன் கொண்ட சோலார் பிளான்டை விமான நிலையத்தின் வருகை முனைய கட்டிடத்தின் கூரையில் அமைத்தது.

கிரிட் முறையில் வடிவமைக்கப்பட்ட இதில் பேட்டரிக்கு பதிலாக ஸ்டிரிங் இன்வெர்டர்கள் பயன்படுத்தப்பட்டன. இது வெற்றிகரமாக அமைந்ததை அடுத்து, விமான நிலைய வளாகத்திலும், கூரையிலும் மீண்டும் 1 மெகாவாட் சோலார் பிளான்டை அமைத்தது. பாதி சோலார் பேனல்கள் விமான நிலைய கூரைகளிலும், பாதி தரையிலும் அமைக்கப்பட்டன. ரிமோட் கன்ட்ரோல் மூலம் கட்டுப்படுத்தும் வகையில் இந்த சோலார் பிளான்ட் அமைக்கப்பட்டது.

சோலார் மூலம் விமான நிலையம் இயக்கப்பட்ட பிறகு, இதுவரை 550 மெட்ரிக் டன் அளவுக்கு கார்பன் குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தற்போது விமான நிலையம் முற்றிலுமாக சோலார் மயமாக்கப்பட்டுள்ளது. கார்கோ காம்ப்ளக்ஸ் அருகே சுமார் 45 ஏக்கர்கள் நிலப்பரப்பில் 46,150 சோலார் பேனல்களுடன் கூடிய 12 மெகாவாட் சோலார் பவர் பிளான்டை நேற்று கேரள முதல்வர் உம்மன்சாண்டி தொடங்கி வைத்தார். இதன்மூலம் விமான நிலையத்திற்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று, விமான நிலைய நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. முழுவதும் சூரிய மின்சக்தியில் இயங்கும் உலகின் முதல் விமான நிலையம் என்ற பெருமையையும் கொச்சி விமான நிலையம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**காபி, ரப்பர் துறைகளில் இப்போது அந்நிய முதலீடு கிடையாது_**



காபி மற்றும் ரப்பர் தோட்டத்துறை யில் உடனடியாக அந்நிய நேரடி முத லீடுகள் (எப்டிஐ) அனுமதிக்கும் திட்டமில்லை என மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது. இது தொடர்பாக பேசிய மத்திய தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டு துறை செயலர் அமிதாப் காந்த், இதில் எந்த விதமான ஊகங்களுக் கும் இடமில்லை என்று குறிப்பிட் டுள்ளார். தற்போது தேயிலை உற்பத்தி துறையில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. என்றாலும் இதர தோட்டத்துறை மற்றும் செயல்பாடுகளில் அந்நிய முதலீட்டுக்கு அனுமதி அளிக்க வில்லை என்று குறிப்பிட்டார்.

சிஐஐ ஏற்பாடு செய்திருந்த இந்திய - சீனா வர்த்தம் குறித்த கருத்தரங்கில் பேசியபோது இந்த தகவலை காந்த் குறிப்பிட்டார். மேலும் இந்திய சீன வர்த்தகத்தில் மிகப்பெரிய பற்றாக்குறை நிலவு கிறது என்றவர், சீன நிறுவனங்கள் இந்தியாவில் அதிக அளவு முத லீடு செய்ய வேண்டும் என்றார்.

சீனாவில் இந்தியாவும் மிகப் பெரிய சந்தையை வைத்துள்ளது. நேரடியான வர்த்தகத்தில் மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு நிலவுகிறது என்றார். சீன நிறுவனங்கள் இந்தியாவில் மேற்கொண்டுள்ள முதலீடு 112 கோடி டாலராக உள்ளது என்று குறிப்பிட்டவர், இது மொத்த அந்நிய நேரடி முதலீட்டில் 0.44 சதவீதம்தான் என்றார்.

சீன நிறுவனங்கள் இந்தியாவில் உற்பத்தி வசதிகளை அதிகரித்துக் கொள்வதற்கு ஏற்ப முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். மேலும் சீன நிறுவனங்களுக்கு இந்தியாவில் தொழில் தொடங்க அனைத்து வசதிகளும் ஏற்படுத்தித் தர தயாராக இருப்பதாகவும் காந்த் பேசினார்.

சீனா இரண்டு தொழில் பூங்காக் களை இந்தியாவில் அமைக்க திட்டமிட்டுள்ளது என்று குறிப்பிட் டவர், மேலும் பல தொழில்

பூங்காக்களை அமைக்க வேண்டும் என விரும்புகிறோம். இதற்கு ஏற்ப சீன நிறுவனங்களுக்கு உதவி செய்ய தயாராக இருக்கிறோம் என்றும் குறிப்பிட்டார்.

அரசு புள்ளி விவரங்கள்படி 2014-15 ஆம் ஆண்டில் இயற்கை ரப்பர் இறக்குமதி அதிகரித்து 4,42,130 டன்னாக உள்ளது. 2013-14 ஆம் ஆண்டில் 3,60,263 டன் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. 2012-13 ல் இறக்குமதி அளவு 2,62,753 டன்னாக இருந்தது.

இயற்கை ரப்பர் உற்பத்தி 12 ஆண்டுகள் இல்லாத வகையில் மிக வும் குறைந்த அளவாக 2014-15ம் ஆண்டில் 6,45,000 டன் என்கிற அள வில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2013- 14 ம் ஆண்டில் இது 7,74,000 டன்னாக இருந்தது.

உள்நாட்டு உற்பத்தியை அதிகப்படுத்த அரசு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை எடுத்து வரு கிறது. இதற்கேற்ப இயற்கை ரப்பர் கொள்கைகள் வகுக்கப்பட்டு வரு கிறது. டயர் உற்பத்தி நிறுவனங்கள் தவிர பிற தொழில்துறைகளும் சேர்ந்து 2014-15 ஆண்டில் 10,18,000 டன் ரப்பர் பயன்படுத்தி உள்ளன என்று அரசு புள்ளி விவரங்கள் குறிப்பிட்டுள்ளது.

**தோவாளை மார்க்கெட்டில் மல்லிகை பூ விலை ரூ.250 உயர்வு ஒரு கிலோ ரூ.500–க்கு விற்பனை**



தோவாளை மார்க்கெட்டில் மல்லிகை பூ விலை நேற்று ரூ.250 உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.500–க்கு விற்பனை செய்யப்பட்டது.

மல்லிகை விலை உயர்வு

நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு குமரி மாவட்டத்தில் இருந்து மட்டுமின்றி நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்தும் பூக்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது. இங்கு பூக்கள் சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்கப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.250–க்கு விற்கப்பட்ட மல்லிகை பூ, நேற்று ரூ.250 உயர்ந்து ஒரு கிலோ ரூ.500–க்கு விற்பனை செய்யப்பட்டது.

ஓணம் பண்டிகை

மல்லிகை பூவின் விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறுகையில் “ மல்லிகை பூவின் வரத்து குறைவாக இருந்தது. கேரளாவில் ஓணம்பண்டிகை தொடங்கியதால் மல்லிகை பூவின் தேவை அதிகமாக இருந்தது. இதனால் வியாபாரிகள் போட்டி போட்டு மல்லிகை பூவை ஏலம் எடுத்து சென்றனர். இதனால் தான் மல்லிகை பூவின் விலை உயர்ந்து காணப்பட்டது” என்றார்.

விலை விவரம்

அதுபோல் பிச்சி ரூ.300–க்கும், சம்பங்கி ரூ.250–க்கும், முல்லை ரூ.250–க்கும், சிவந்தி ரூ.250–க்கும், கனகாம்பரம் ரூ.250–க்கும், வெள்ளை சிவந்தி ரூ.150–க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.150–க்கும், பட்டன்ரோஸ் ரூ.120–க்கும், மருக்கொழுந்து ரூ.120–க்கும், அரளி ரூ.100–க்கும், வாடாமல்லி ரூ.100–க்கும், கொழுந்து ரூ.100–க்கும், கோழிப்பூ ரூ.60–க்கும், மஞ்சள்கேந்தி ரூ.50–க்கும், மாம்பழ கேந்தி ரூ.30–க்கும், துளசி ரூ.25–க்கும், பச்சை ரூ.5–க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.300–க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.30–க்கும் நேற்று விற்பனை செய்யப்பட்டது.

**கூரை, மண்சுவர் வீடுகளுக்கு பதிலாக “பசுமை வீடுகள்” கட்டித்தரப்படும் கலெக்டர் வி.சம்பத் தகவல்**

சேலம் மாவட்ட பேரூராட்சிகளில் கூரை மற்றும் மண்சுவர் வீடுகளுக்கு பதிலாக, 'பசுமை வீடுகள்' கட்டித்தரப்படும் என்று கலெக்டர் வி.சம்பத் தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

பொருளாதாரத்தில் நலிவடைந்த குடும்பத்தினருக்கு கூரை மற்றும் மண் சுவர் வீடுகளை சோலார், கான்கிரீட் உடன் கூடிய பசுமை வீடுகளாக மாற்றித்தரப்பட உள்ளது தொடர்பாக மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் கலெக்டர் வி.சம்பத் தலைமையில் நடைபெற்றது

கூட்டத்தில் கலெக்டர் சம்பத் கூறியதாவது:-

கூரை, மண்சுவர் வீடுகள் கணக்கெடுப்பு

சேலம் மாவட்டத்திலுள்ள பேரூராட்சிப் பகுதிகளில் பொருளாதாரத்தில் நலிவடைந்த குடும்பத்தினரின் கூரை மற்றும் மண் சுவர் வீடுகளை ரூ.2 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் சோலார், கான்கீரிட் உடன் கூடிய பசுமை வீடுகளாக மாற்றித்தரப்பட உள்ளது. இந்த வீடு கட்டும் திட்டத்திற்கு மாவட்ட கலெக்டரான என்னை தலைவராக கொண்டு, திட்ட இயக்குனர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், உதவி, இளநிலை பொறியாளர்கள், செயல் அலுவலர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும், பேரூராட்சிகளின் உதவி இயக்குனரை ஒருங்கிணைப்பாளராகவும் கொண்டு மாவட்ட அளவிலான

கமிட்டி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்திலுள்ள 33 பேரூராட்சிகளில் மொத்தம் 13,940 கூரை மற்றும் மண் சுவர் வீடுகள் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளது. விரைவில் அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு சோலார், கான்கிரீட் உடன்கூடிய பசுமை வீடுகள் கட்டப்படும்.இவ்வாறு கலெக்டர் கூறினார்.
அறிவுரைகள்

மேலும், கூட்டத்தில் வழிகாட்டு நெறிமுறைகளின்படி பயனாளிகள் தேர்வு செய்தல், பேரூராட்சி மன்ற அங்கீகாரம் பெறுதல் மற்றும் வீடுகள் கட்டித்தருவது குறித்தும் கலெக்டர் சம்பத்தால் விரிவாக அறிவுரைகள் வழங்கப்பட்டது.

கூட்டத்தில் சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் திருஞானம், உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) பிச்சாண்டி, செயற்பொறியாளர்(தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்) நஞ்சப்பன், பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் மோகன் உள்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

**ஜெயலலிதா முயற்சியால் இந்தியா முழுவதும் விவசாயிகளுக்கு விவசாயக்கடன் தமிழ்நாட்டில் 10 லட்சத்து 75 ஆயிரம் பேர்களுக்கு ரூ.5,500 கோடி பயிர்க்கடன்**



சென்னை,

முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் முயற்சியால், இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு தடையில்லாத குறுகியகால விவசாயக்கடன் பெற வழிவகை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம், தமிழ்நாட்டில் 10 லட்சத்து 75 ஆயிரம் பேர்கள் ரூ.5,500 கோடி பயிர்க்கடன் பெறுகிறார்கள்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

<u>குறுகிய கால பயிர்க்கடன்</u>

விவசாயிகளுக்கான குறுகியகால பயிர்க்கடன் வட்டி மானிய திட்டத்தை நடப்பு நிதியாண்டில் 30.6.2015 வரை மட்டும் மத்திய அரசு நீட்டித்து மாற்று திட்டத்தை ஆலோசித்து வந்த நிலையில், தமிழ்நாடு அரசு சார்பில் இதுதொடர்பாக கடிதம் ஒன்று 29.4.2015 அன்று அனுப்பப்பட்டது. இதனைத்தொடர்ந்து 20.6.2015 அன்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா, பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், விவசாயிகளுக்கான குறுகியகால பயிர்க்கடன் வட்டி மானியத்திட்டத்தில், தற்போதுள்ள

நடைமுறைகளின்படியே தொடர வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தி எழுதியுள்ளார்.

மத்திய அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்ட இரண்டு மாற்றங்களும் பாதகமானவை என்று அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தார். முதலாவதாக, வங்கிகள், முன்னுரிமை பிரிவுகளுக்கு அடிப்படையான வட்டி விகிதத்தில் கடன் வழங்க அனுமதித்தல், இரண்டாவதாக, பயனாளிகளுக்கு நேரடியாக மானியம் வழங்குதல், அதாவது விவசாயிகள் தாங்கள் பெற்ற கடனை முழுமையாக திரும்பச் செலுத்திய பின்னர், நேரடியாக மானியம் வழங்கும் முறை, தற்போதுள்ள நடைமுறையான வங்கிகளின் கடன் வழங்கும் தகுதிக்கேற்ப வட்டி மானியத்தினை வங்கிகளுக்கு வழங்கும் முறைக்கு மாறுபட்டதாகும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

<u>கடன்களுக்கான வட்டி...</u>

மேலும் தமது கடிதத்தில், எதிர்பாராத நிகழ்வுகளுக்கு உட்படும் வேளாண்மைப் பணிகளை மேற்கொள்ளும்போது, தற்போது வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி விகிதங்களை உயர்த்துவதோ, அல்லது விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளை குறைப்பதோ தேவையற்றதாகும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இச்சூழ்நிலைகளில் விவசாயிகள் அதிக வட்டியினை முதலில் செலுத்தி, பின்னர் அத்தொகையை, நேரடி மானியம் மூலம் பெறுவது என்பது விவசாயிகளை கடுமையாகப்பாதிக்கும் என்றும், தற்போது நடைமுறையில் உள்ளபடி, விவசாயிகளுக்கு வங்கிக்கணக்கு மூலம் கடன் வழங்கப்படும்போதே, விவசாயிகள் வட்டி சலுகைகளைப்பெற்று வருகின்றனர். நேரடி மானியத்திட்டத்திற்கு மாறும்போது, கடனைத்

திரும்பச்செலுத்திய பின்னர், மானியம் வழங்கப்படுவதால் விவசாயிகளுக்கு எவ்வித பலனும் இல்லாததுடன், விவசாயிகளுக்கு உரியநேரத்தில் கடன் கிடைப்பதிலும், இலக்கினை அடைவதிலும், பொறுப்புடைமையிலும் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது என்றும் அந்த கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

<u>மானியத்திட்டம்</u>

மேலும், தமிழ்நாடு அரசு, கூட்டுறவுகள் மூலம் வழங்கப்படும் பயிர்க்கடன்களுக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து 4 சதவிகிதத் தொகையினை, ஊக்க வட்டி மானியமாக மத்திய அரசு வழங்கும் வட்டி மானியத்துடன் கூடுதலாக வழங்கி வருவதனையும் குறிப்பிட்டுள்ளார். இதனால், தமிழ்நாட்டில் விவசாயப் பெருமக்கள், உரியகாலத்தில் கடனை செலுத்தும்போது, வட்டியின்றி பயிர்க்கடன் பெற்று பெரும்பயன் அடைகின்றனர். நம்நாட்டின் வேளாண் வளர்ச்சிக்கு உந்துதல் கொடுக்கவேண்டும் எனில், விவசாயிகளுக்கு தேவையான அளவு பயிர்க்கடன் கிடைக்கச்செய்வது அவசியம். எனவே, அடிப்படை நிலவரத்தை கருத்திற்கொள்ளாமல், தற்போதுள்ள நடைமுறையினை மாற்றம் செய்வது, கடும் எதிர் விளைவுகளை உருவாக்கக்கூடும்.

எனவே, நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வரும் விவசாயிகளுக்கான இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, பிரதமர் நேரடியாக தலையிட்டு, இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் குறித்து, தொடர்புடைய அனைவரிடமும் நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்தாலோசனை மேற்கொண்டு, விவசாயிகளுக்கு அதிக பயன்தரக்கூடிய வகையில் திட்டம் அமையவேண்டும் எனவும், தற்போது நடைமுறையில் உள்ளவாறே குறுகியகால பயிர்க்கடன் வட்டி மானியத்

திட்டம் தொடரவேண்டும் எனவும், முதல்–அமைச்சர் ஜெயலலிதாவால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மானியம் தொடர்ந்து வழங்கப்படும்

ஜெயலலிதாவின் கடிதத்திற்கு, மத்திய நிதி மந்திரி, தமிழ்நாடு முதல்–அமைச்சருக்கு 3.8.2015 தேதியிட்ட பதில் கடிதத்தில், மத்திய அரசு தற்போதுள்ள வட்டி மானியத் திட்டத்தின்படி மார்ச் 2016 வரை குறுகியகால பயிர்க்கடன்களுக்கு வட்டி மானியம் தொடர்ந்து வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், இதுதொடர்பாக, மத்திய அரசின் வேளாண்மைத் துறையால் ஒரு குழு அமைக்க மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளதாகவும், இக்குழு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன்களை மேம்படுத்தவும், வட்டி மானியத்திட்டத்தின் நிதி ஆதாரங்களை அதிக அளவில் பயன்படுத்தவும் பரிந்துரைக்கும் எனவும் தெரிவித்துள்ளார். இப்பொருள் தொடர்பாக மாநில அரசுகளுடன் கலந்தாலோசனை மேற்கொள்வதற்கான விவாதக் குறிப்புகளை நிதி ஆயோக் அமைப்பு தயாரித்து வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரூ.5,500 கோடி பயிர்க்கடன்

ஜெயலலிதா மேற்கொண்ட முயற்சியால் இந்தியா முழுவதுமுள்ள விவசாயிகள், தடையில்லாத குறுகியகால விவசாயக்கடன் பெற வழிவகை ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 2014–2015–ம் நிதி ஆண்டில் 10 லட்சத்து 36 ஆயிரத்து 859 விவசாயிகளுக்கு, ரூ.5 ஆயிரம் கோடி என நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட கூடுதலாக, ரூ.5,279.91 கோடி

பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் (2015–2016) 10 லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ.5,500 கோடி பயிர்க்கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**முகூர்த்த நாளையொட்டி காய்கறிகள் விலை 5 சதவீதம் உயர்ந்தது இனி வரக்கூடிய நாட்களிலும் விலை அதிகரிக்க வாய்ப்பு**



சென்னை

முகூர்த்த நாளையொட்டி காய்கறிகள் விலை 5 சதவீதம் உயர்ந்துள்ளது என்றும், இனி வரக்கூடிய நாட்களில் விலை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

தக்காளி, பல்லாரி வெங்காயம்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த வாரத்தில் காய்கறிகள் விலை குறைந்து காணப்பட்டது. கடந்த மாதத்தில் விலை உச்சத்தில் காணப்பட்ட பீன்ஸ், அவரைக்காய், முருங்கைக்காய் ஆகியவை கடந்த வாரத்தில் விலை குறைந்து காணப்பட்டது. மற்ற காய்கறிகளின் விலையும் குறைந்தது. கடந்த மாதத்தில் ஒரு கிலோ ரூ.25 முதல் 30 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த பல்லாரி வெங்காயம், கடந்த வாரத்தில் கிலோவுக்கு ரூ.15 அதிகரித்து, ஒரு கிலோ ரூ.45-க்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று காய்கறிகள் விலை சற்று உயர்ந்துள்ளது என்றும், தக்காளி, பல்லாரி ஆகியவற்றின் விலை கிலோவுக்கு ரூ.5 அதிகரித்துள்ளது என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்து கோயம்பேடு வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்தரராஜன் கூறியதாவது:-

5 சதவீதம் உயர்வு

கடந்த வாரத்தில் காய்கறிகள் விலை குறைந்து காணப்பட்டது. தக்காள் விலையும் வீழ்ச்சி அடைந்திருந்தது. ஆனால் நேற்று முகூர்த்த நாளையொட்டி காய்கறிகள் விலை 5 சதவீதம் வரை உயர்ந்து காணப்பட்டது. தக்காளி விலை கடந்த வாரத்தில் ஒரு கிலோ ரூ.7, ரூ.8-க்கு விற்பனை செய்யப்பட்டது. 70 லாரிகளில் வந்து கொண்டு இருந்த தக்காளி, தற்போது 55 லாரிகளில் வருவதால், தக்காளி விலை கிலோவுக்கு ரூ.5 வரை அதிகரித்துள்ளது. அதேபோல், மராட்டிய பல்லாரி வெங்காயம் கடந்த வார விலையை விட நேற்று கிலோவுக்கு ரூ.5-ம், முருங்கைக்காய் விலை கடந்த வாரத்தை காட்டிலும் கிலோவுக்கு

ரூ.5 முதல் ரூ.10 வரையும் அதிகரித்துள்ளது. இனி வரக்கூடிய நாட்களிலும் காய்கறிகள் விலை படிப்படியாக அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது.

விலை நிலவரம்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகள் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:-

உருளைக்கிழங்கு - ரூ.15, மராட்டிய பல்லாரி வெங்காயம் - ரூ.50, ஆந்திரா பல்லாரி வெங்காயம் - ரூ.30, பீன்ஸ் - ரூ.25, கேரட் - ரூ.30, நூக்கல் - ரூ.25, சவ்சவ் - ரூ.25, முட்டைக்கோஸ் - ரூ.15, மிளகாய் - ரூ.20, சேப்பக்கிழங்கு - ரூ.30, சேனைக்கிழங்கு - ரூ.25, கத்தரிக்காய் - ரூ.8 முதல் ரூ.15 வரை, வெண்டைக்காய் - ரூ.15, அவரைக்காய் - ரூ.20 முதல் ரூ.25 வரை, கோவைக்காய் - ரூ.15, கொத்தவரங்காய் - ரூ.20, பாகற்காய் - ரூ.25, முருங்கைக்காய் - ரூ.35, பச்சைப்பட்டாணி - ரூ.170, தக்காளி - ரூ.10 முதல் ரூ.12 வரை, சாம்பார் வெங்காயம் - ரூ.35, காலிபிளவர் - ரூ.25 முதல் ரூ.30 வரை, புடலங்காய் - ரூ.20, சுரைக்காய் - ரூ.15, பீர்க்கங்காய் - ரூ.25, தேங்காய் - ரூ.20, வாழைக்காய் (காய் ஒன்று) - ரூ.5. இவ்வாறு அவர் கூறினார்.